பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 31 ஞாயிற்றுக்கிழமை (16-09-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:294

# அமைச்சரவை 23ஆக உயரும்!

## ஜே.வி.பி. முரண்படும் ஏதுநிலை

கொழும்பு,செப்ரெம்பர்16

**ஸ்ரீலங்காவின் ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தற்போது அமைத்திருக்கும் புதிய அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கை நாளையுடன் 23ஆக உயரும் ஏதுநிலை காணப்படுகின்றது.**

நாடாளுமன்றப் பெரும்பான்மையை இழந்து சிறுபான்மை அரசான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு அந்தர் சமயத்தில் முண்டுகொடுக்க முன்வந்த ஜே.வி.பி. அதற்குப் பிரதியுபகாரமாக அமைச்சர்களின் எண்ணிக்கை 20ஆகக் குறைய வேண்டுமென்று நிபந்தனை விதித்திருந்தது.

இந்த நிபந்தனையை மீறி பொ.ஐ.முன்னணி அரசு நாளையுடன் 23 பேரை அமைச்சர்களாக நியமிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் பொ.ஐ.முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் விரிசல் உடனடியாக ஏற்படலாம் எனவும் கருதப்படுகின்றது.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் 18 பேர் நேற்றுமுன்தினம் அமைச்சர் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டனர்.

இதன்படி ஜனாதிபதி, பிரதமர் உட்பட இருபது பேர் கொண்ட புதிய அமைச்சரவை நேற்றுமுன்தினம் பதவியேற்றது.

ஐ.தே.கவிலிருந்து பொ.ஐ.முன்னணிக்கு குத்துக்கரணம் அடித்த முன்னாள் அமைச்சரான விஜயபால மெண்டிஸ், கலாசார அலுவல்கள், விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சராக - 21ஆவது அமைச்சராக - நேற்றுமுன்தினம் மாலையில் ஜனாதிபதி முன் சத்தியப்பிரமாணம் செய்தார்.

எனினும் -

கட்டான தொகுதியில் அவரது அரசியல் எதிரியான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே அமைச்சராகப் பதவி ஏற்கும் வரை விஜயபால மெண்டிஸின் சத்தியப்பிரமாணம் குறித்து மூச்சுவிடக்கூடாது என்று அரச செய்தி ஊடகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்ததாக அறியவந்தது.

22ஆவது அமைச்சராக ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இன்றும் -

23ஆவது அமைச்சராக ஆறுமுகம் தொண்டமான் நாளையும் -

பதவியேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர்கள் எண்ணிக்கை 20 ஆக இருக்கவேண்டும் என்று வலியுறுத்திவரும் ஜே.வி.பி. அந்த எண்ணிக்கை 23 ஆக உயர்வதை அனுமதிக்குமா என்பதே தற்போதுள்ள கேள்வி.

அதேசமயம்

முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தித்துறை அமைச்சர் எஸ்.ஈ.சேரசிங்க, கூட்டுறவு, உணவுத்துறை பிரதி அமைச்சராக இன்று பதவியேற்க உள்ளார் - எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-ம-4)

# அரசு – ஜே.வி.பி. பேச்சில் இணக்கம் ஏற்படவில்லை

கொழும்பு,செப்.16

நான்கு சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பது தொடர்பான 17ஆவது திருத்தச் சட்டமூலம் குறித்து அரசுக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற பேச்சுக்களில் எந்தவித இணக்கமும் ஏற்படாமலேயே முடிவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 8மணி தொடக்கம் நள்ளிரவு வரை பேச்சுக்கள் நடைபெற்றன.

இந்தப் பேச்சுக்கள் வெற்றி பெறாததை அடுத்து நாளை திங்கட்கிழமை மீண்டும் சந்தித்துப்பேசுவது என இருதரப்பினரும் தீர்மானித்திருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-4)

# யாழ். குடாநாட்டில் 'எய்ட்ஸ்' பரவும் ஆபத்து!

## உலக வங்கிக் குழு எச்சரிக்கை

கொழும்பு,செப்.16

உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படாவிட்டால் யாழ்குடாநாட்டில் 'எய்ட்ஸ்' நோய் வேகமாகப் பரவுவதைத் தடுக்க முடியாது போய்விடும் என்று உலக வங்கி எச்சரித்திருக்கின்றது.

உலக வங்கியின் இலங்கை இயக்குநர் மரியானா ரொடோரோவா தலைமையிலான உலக வங்கிப் பிரதிநிதிகள் குழு ஒன்று குடாநாட்டில் அண்மையில் சுற்றுப் பயணம் செய்த பின்னர், இந்த எச்சரிக்கையை விடுத்திருப்பதாக 'கொழும்பு பேஜ்' என்ற இணையத்தளம் தகவல் வெளியிட்டிருக்கின்றது.

"குடாநாட்டின் எய்ட்ஸ் நிலைமை தொடர்பாக சரியான புள்ளிவிவரங்கள் இல்லாதபோதிலும் எய்ட்ஸ்

(14ஆம் பக்கம் பார்க்க)

# கிளைமோர் தாக்குதலில் 4 படையினர் படுகாயம்

## ஏறாவூரில் நேற்று சம்பவம்

மட்டக்களப்பு,செப்.16

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் ஏறாவூர்ப் பகுதியில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதலில் 4 படையினர் படுகாயமடைந்தனர்.

வாழைச்சேனை வீதியால் சென்றுகொண்டிருந்த இராணுவக் கவச வாகனத்தை இலக்குவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் கவச வாகனம் பெரும் சேதத்துக்குள்ளானது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த 4 படையினரும் உடனடியாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மட்டக்களப்பு வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-4)

# அமெரிக்கா மீதான தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகள் கடும் கண்டனம்!

லண்டன்,செப்.16

அமெரிக்காவின் உலக வர்த்தக மையக் கட்டடம் மற்றும் பென்டகன் மீதான தாக்குதலை ஒட்டி யாழ். குடாநாட்டு மக்களுக்கு விடுதலைப் புலிகள் துண்டுப்பிரசுரம் ஒன்றை விநியோகித்தனர் என ஸ்ரீலங்கா அரச செய்தி ஊடகங்களில் நேற்று வெளியான தகவல்களை விடுதலைப் புலிகள் அடியோடு மறுத்துள்ளனர்.

இது குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்றுப் பின்னிரவு உதயனுக்கு கருத்து வெளியிட்ட போது -

"இந்த மனிதப் பேரவலத்தை தனது அரசியல் இலாபத்துக்காக ஸ்ரீலங்கா அரசு தவறாகப் பயன்படுத்த முயல்கின்றது" - என்றார்.

அமெரிக்கா மீதான தாக்குதல் "கொடூரமான குற்றச் செயல்" - என்று வர்ணித்தார் பாலசிங்கம்.

இந்தத் தாக்குதலை ஒட்டி யாழ். மக்களுக்கு துண்டுப் பிரசுரம் மூலம் புலிகள் செய்தி ஒன்றை விநியோகித்ததாகத் தெரிவித்த ஸ்ரீலங்கா அரச செய்தி ஊடகம் ஒன்று, "இந்தத் தாக்குதல் சிங்கள அரசுக்கு நல்லதோர் பாடம்" என்றும், "அமெரிக்கா போன்ற வல்லரசு நாட்டுக்கு நல்ல எச்சரிக்கை" என்றும் புலிகள் அந்தச் செய்தியில் தெரிவித்திருந்ததாகக் குறிப்பிட்டது.

அரசு சார்பில் இயங்கும் துணைப்படை ஒன்று புலிகளின் பெயரைக் கெடுக்க முனைவதாகவும் அவர் சொன்னார்.

"யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா

(14ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில்

## யாழ். மாவட்டத்துக்கு மூன்று தங்கப் பதக்கங்கள்

கொழும்பு,செப்.16

கொழும்பில் நேற்று நடைபெற்ற தேசிய தமிழ்த்தினப் போட்டிகளில் யாழ்.மாவட்டத்துக்கு மூன்று தங்கப் பதக்கங்களும் மூன்று வெள்ளிப் பதக்கங்களும் கிடைத்துள்ளன.

தேசிய தமிழ்த்தினத்தையொட்டிய முதற்கட்டப் போட்டிகள் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் நேற்று இடம்பெற்றன. யாழ். மாவட்ட மாணவர்கள் கலந்துகொண்ட ஆறு போட்டிகளிலும் அவர்களுக்குப் பதக்கங்கள் கிடைத்துள்ளன.

பரிசு பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**தங்கப் பதக்கம்**

- சுகிர்தா சிறீவரதன்(வேம்படி

(14ஆம் பக்கம் பார்க்க)

# முகாம்களை விட்டு விலகி இருக்குமாறு மட்டு. மக்களுக்கு புலிகள் அறிவிப்பு!

மட்டக்களப்பு,செப்.16

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இராணுவ நிலைகள் மீது தாங்கள் எந்த நேரத்திலும் தாக்குதல் தொடுக்கலாம் என்பதால் இராணுவ மற்றும் பொலீஸ் நிலையங்களுக்கு அருகில் வசிக்கும் மக்களை அங்கிருந்து விலகி இருக்குமாறு விடுதலைப் புலிகள் துண்டுப்பிரசுரம் மூலம் கேட்டுள்ளனர்.

மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேச மக்களுக்கு நேற்றுக்காலை இந்தத் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இராணுவ நிலைகள் மீது நாம் மேறகொள்ளக் கூடிய தாக்குதல்களின்போது இடம்பெறும் கனிசமான எறிகணை வீச்சுக்களால் பொதுமக்களுக்கு உயிரிழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. இதனைத் தவிர்க்கும் முகமாக அப்பகுதிகளில் இருந்து விலகியிருப்பதோடு இராணுவத்தினருடன் எந்தவிதமான தொடர்புகளினையும் வைத்துக்கொள்ளாது எமது வெற்றிக்கு வழிகோலுங்கள்.

தமது சொந்த மண்ணில் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காக

(14ஆம் பக்கம் பார்க்க)

# நாளை 'லங்கா முதித்த' சேவை; கப்பல் பயணிகளுக்கு அழைப்பு!

யாழ்ப்பாணம்,செப்.16

காங்கேசன்துறையில் இருந்து 'லங்கா முதித்த' கப்பல் நாளை திங்கட்கிழமை ஒரு தொகுதி பயணிகளுடன் திருகோணமலைக்குச் செல்லவுள்ளது.

இக்கப்பலில் பயணம் செய்வதற்கெனப் பயணச்சீட்டுப் பெற்றவர்களை நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்கு பயண ஆயத்தங்களுடனும் உணவு மற்றும் குடிதண்ணீர் ஆகியவற்றுடனும் யாழ். மணியம் கட்டடத்தில் இயங்கும் 'றான்' அலுவலகத்துக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணம் செய்வோர் தம்முடன் மின் உபகரணங்கள் மற்றும் எலக்ரோனிக் சாதனங்கள், கடிதங்கள் மற்றும் பிறரது ஆவணங்கள் என்பனவற்றை எடுத்து வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. (ஐ-10)

பெற்றோர்களே!

MANKIND IS OUR BUSINESS

உங்கள் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டுமருந்து கொடுக்கும் தினம் (22.09.2001) சனிக்கிழமை

மறந்துவிடாதீர்கள்!!

PolioPlus Rotary International

- யாழ்.றோட்டறிக் கழகம்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## கைதானவர் விடுவிப்பு

திருமண நிகழ்வொன்றில் வீடியோ படம் பிடித்துக்கொண்டிருந்த வேளையில் படையினரின் அனுமதி யின்றி கடற்பகுதியை படம் பிடித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த 11ஆம் திகதி கைது செய்யப்பட்ட அல்வாய் வடக்கைச் சேர்ந்த சண்முகம் சாந்த குமார் என்பவர் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேகநபருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு போதிய ஆதாரங்கள் இல்லாமையால் அவரை விடுதலை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-117)

## திரிபோஷா மா விநியோகம்

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு இவ்வாரம் திரிபோஷா மா யாழ்.சுகாதாரத் திணைக்களத்தினால் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் நடத்தப்பட்டு வரும் கர்ப்பிணிகள் கிளினிக்குகளிலும், சிறுவர் கிளினிக்குகளிலும் போஷாக்கு குறைந்தவர்களுக்கு இம்மா இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. (ம-135)


விவசாய பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**புதிய கல்வியாண்டு 2001/2002க்கான விரிவுரைகள் ஆரம்பம்**

பின்வரும் பிரிவுகளுக்கான விரிவுரைகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 04ஆம் திகதி ஆரம்பமாகும் என்பதனை அறியத்தருகின்றேன்.

1. முதலாம் வருடம் முதலாம் அரையாண்டு (2001/2002 புதிய அனுமதி)
2. இரண்டாம் வருடம் முதலாம் அரையாண்டு (2000/2001)
3. இரண்டாம் வருடம் இரண்டாம் அரையாண்டு (1999/2000)
4. மூன்றாம் வருடம் இரண்டாம் அரையாண்டு (1998/1999)

*- பதிவாளர்.* (C18291)


# அச்சுவேலிப் பகுதி கடைகளில் காலாவதியான பொருள்கள் மீட்பு

அச்சுவேலிப் பகுதி வர்த்தக நிலையங்கள் மீது சுகாதாரப் பரிசோதகர் குழு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டது.

இதன்போது இப்பகுதி வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பாவனைத் திகதி காலாவதியான உணவுப்பொருள்கள், பிஸ்கட் வகைகள், சோயா, சொக்கிலேட் வகைகள் ஆகியன கைப்பற்றப்பட்டன இப்பொருள்கள் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றமிழைக்கப்பட்டதெனக் கருதி வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்குவிசாரணை எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

அச்சுவேலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வி.இராஜேந்திரா தலைமையில் சென்ற குழுவே இந்நடவடிக்கைகளை மேற்கொண்டது. (ஐ-72)

# அங்கவீனர்களுக்கு ஜி.ரி.இசற் உபகரணங்கள் அன்பளிப்பு

## விவரங்களைப் பதியக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.16

யாழ்ப்பாணத்தில் நிலக் கண்ணி வெடிகள், குண்டுவெடிப்புகள், விபத்துக்கள் என்பவற்றில் சிக்கி அங்கவீனமானவர்களுக்கு ஒரு தொகுதி உபகரணங்களை வழங்க ஜி.ரி.இசற் நிறுவனம் முன்வந்துள்ளது.

இதற்கான உபகரணங்களை ஜேர்மனைச் சேர்ந்த கொடையாளி ஒருவர் ஜி.ரி.இசற் மூலம் வழங்க உள்ளார்.

சக்கர நாற்காலிகள் (சிறுவர்களுக்கானதும் பெரியவர்களுக்கானதும்) கழிவறை நாற்காலிகள், ஊன்று கோல்கள் (இருவகை), அங்கவீனர்களுக்கான துவிச்சக்கரவண்டிகள், பாலர்களுக்கான கைவண்டிகள் என்பனவே வழங்கப்படவுள்ளன.

இந்த உபகரணங்களை இலவசமாகப்பெற விரும்பும் தகுதியானவர்கள் தங்களது சுயவிவரம் மற்றும் அங்கவீனமடைந்ததற்கான காரணம் என்பவற்றை குறிப்பிட்டு ஜி.ரி.இசற் யாழ்.அலுவலகத்தில் பதிவுசெய்து கொள்ளும் படி பிரதான இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ம)

# அளவெட்டி கொள்ளைச் சம்பவம்

யாழ்ப்பாணம்,செப்.16

அளவெட்டி தெற்கில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் 3 லட்சத்து 26ஆயிரத்து 450ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டிருப்பதாக சுன்னாகம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் 16லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டதாக முன்னர் வெளியிடப்பட்ட தகவல் தவறு என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான செய்தி 'சுன்னாகம் பொலீஸாரால் இரு சந்தேக நபர்கள் கைது' என்ற தலைப்பில் கடந்த வெள்ளிக்கிழமை 'உதயனில்' வெளியாகி இருந்தது. (ஐ)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



'கொடிகாமம் வாத்தியார்'
என பிரபலமாக அழைக்கப்படும்
யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலய அதிபர்

**திரு. குமாரலிங்கம் பூபாலசிங்கம்**

அவர்கள் பாடசாலை அதிபர் தரம் 1க்கு பதவியுயர்வு பெற்றுள்ளதையிட்டு,
அவரது சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*சட்டத்தரணி சி.வீரகத்திப்பிள்ளை, இ.தவராசா*
*மற்றும்*
*கல்வித் திணைக்கள நண்பர்கள்.*

(92361)


# ஒரு நாளும் ஓயாத நினைவுகள்

**முதலாம் ஆண்டு** **5ஆம் ஆண்டு** **19ஆம் ஆண்டு**





**பரமேஸ்வரி லோகநாதன்** **தினேஷா யோகராசா** **சின்னையா லோகநாதன் (செட்டியார்)**

| | பரமேஸ்வரி லோகநாதன் | தினேஷா யோகராசா | சின்னையா லோகநாதன் (செட்டியார்) |
|---|---|---|---|
| தாயின் மடியில் | 17.05.1940 | 26.03.1989 | 02.02.1931 |
| இறைவன் அடியில் | 27.08.2000 | 01.08.1996 | 26.11.1982 |

**திதி: 16.09.2001**

*ஆண்டொன்று ஆனதே எமை விட்டகன்று*
*ஆனாலும் அகலவில்லை அம்மா உம் நினைப்பு*
*நேற்று நடந்தது போல் நெஞ்சுருகி நிற்கின்றோம் அம்மா*
*ஆற்றுவார் யார் உண்டு உன் போல் தாயே!*

*அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாய் இருந்த எங்களை*
*நல்வழிப்படுத்திய எமது அன்புத் தெய்வங்களின் ஆத்மா*
*சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்*
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!*

*சோ. யோகராசா,*
*தினேஷாம்பாள் வெதுப்பகம்,*
*46/20, அரச வீதி, நல்லூர்.*

உங்கள் நினைவில் வாடி நிற்கும்
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(92360)

# றோட்டறக்ட் பதவியேற்பு நிகழ்வு

யாழ்ப்பாணம் றோட்டறக்ட் கழகத்தின் 9ஆவது பதவியேற்பு வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அருணஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டின் 3ஆம் மாடியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சகல றோட்டறி, றோட்டறக்ட் மற்றும் இன்டறக்ட் கழகங்களின் உறுப்பினர்களையும் நலன் விரும்பிகளையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-10)

## வாசகர் திருமுகம்

### விதண்டாவாதமல்ல!

02.09.2001 ஆம் திகதிய உதயனின் வாசகர் திருமுகத்தில் வி.ச. லிங்கம் என்பவரால் கேட்கப்பட்ட கேள்விகள் அனைத்தும் நியாயமுடையவை மட்டுமல்ல நீதியால் நிரூபிக்கப்பட்டவையும் கூட. இதனை பின் வருவன மெய்ப்பித்து நிற்கின்றன.

★ யாழ். மாவட்டத்தில் நீண்ட காலமாக ஓய்வூதியம் பெறாத ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் உள்ளது. அந்த விவரத்தினை அப்படியே இங்கு தருவதானால் இந்த வாசகர்திருமுகத்தில் அடக்கி விடமுடியாது.

★ வழங்கப்படாதுள்ள வடக்கு - கிழக்கு ஆசிரியர்களின் சம்பள நிலுவைகளை வழங்குமாறு நீதிமன்றம் தீர்ப்பளித்து ஆறுமாதங்களாகிவிட்டது. எனினும் இன்றுவரை நிலுவை வழங்கப்படவில்லை. இவ்வாறு நிலுவை கிடைக்கப்படாத ஆசிரியர்களின் - அதிபர்களின் பெயர்ப்பட்டியலும் நீண்டுகொண்டு செல்லும்.

★ நல்லூரானின் ஆலயக் கதவுகள் வருடாவருடம் உற்சவத்துக்காக அகலத்திறக்கப்படும்போதுதான் யாழ். மாவட்டத்தில் குறிப்பாக நீவக வலயத்தின் பாடசாலைகளின் கதவுகளும், படலைகளும் திறந்திருக்குமா?

★ 25.09.1999இல் இடம்பெற்ற இடம்பெயர் சேவையில் செயலாளரினால் வழங்கப்பட்ட 8/01/04/9/4/09 ஆம் இலக்க பணிப்புரையின் கீழ் அமைந்த நிலுவைச் சம்பளம் இரண்டு ஆண்டுகள் கடந்தும் வழங்கப்படவில்லை. இதனை "ஏன் இந்த விதண்டாவாதம்?" எனக்கேள்வி எழுப்பும் - அடுத்த பதவியுயர்வை எதிர்பார்த்து செயலாளருக்கு வக்காலத்து வாங்கும் - பணிப்பாளர் தனக்கு பதில் பதவி கிடைத்ததும் மறந்துவிட்டாரா?.

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக்கொண்டு சமகாலத்தில் வேறு அரச பதவிகள் வகிக்கக்கூடாது என்ற சட்டத்திற்கமைய சில பல்கலைக்கழக மாணவர்களின் பல்கலைக்கழக பட்டப்படிப்பை இடையில் ரத்துச் செய்யப்பண்ணியதோடு அல்லாமல் மானியமாகப் பெற்ற புலமைப்பரிசில் பணத்தை மீளச்செலுத்திய மாணவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்காது இழுத்தடிக்கும் செயலாளர், தனது அமைச்சில் அவ்விதம் கல்வி கற்ற சில உயர் அதிகாரிகளைப் பதவியில் தொடர்ந்து வைத்திருக்கிறார். இவ்விதம் பல்கலைக்கழக படிப்பையும் விட்டு மாதாமாதம் சிறு தொகையாக பெற்று, செலவு செய்த புலமைப்பரிசில் பணத்தைக் கடன்பட்டு மொத்தமாக மீளச் செலுத்திய மாணவர்களுக்குச் செய்த "பாவத்திற்கு" தொம்பு போடுவதால் - நல்லூரான் ஏமாளியல்ல - பாவத்தைக் கழுவுவதற்கு.

பொதுமக்கள் மீது விமானக்குண்டை வீசும்படி உத்தரவிடும் பாதுகாப்பு அமைச்சர் கூட புட்டபத்தி சென்று வணங்கி ஆசீர்வாதம் பெற்று வந்த பின்னரே நாச உத்தரவு பிறப்பிக்கின்றார். இவர் அரச உயர் பதவி வகிப்பவர் இல்லையா?

நாவலர் பெருமான் பத்திரிகையில் கண்டன அறிக்கைகள் விட்டதும், கண்டனக் கூட்டங்கள் நடத்தியதும், கொச்சைப்படுத்தும் செயலா?

"மக்கள் சேவையே மகேசன் சேவை". இதைவிடுத்து தமக்கு மேல் உள்ள அதிகாரிகளின் நல்லெண்ணத்தை பெற்று அடுத்த பதவியுயர்வு பெறுவதற்கு தமது நிர்வாகத்திற்குட்பட்ட அலுவலர்களை செயலாலும் நிதி வழங்காமலும் ஆண்டுக் கணக்கில் வருத்திக்கொண்டு சரியைத் தொண்டோ, கிரியைத் தொண்டோ செய்வதால் கிடைப்பது பாவமேயொழிய புண்ணியமில்லை.

**மு.தியாகராசா,**
*(பத்து மாதங்களின் பின் ஓய்வூதியம் வழங்கப்பெற்ற ஆசிரியர்)*

### விளங்கிக்கொள்ளாமல் இருப்பதேன்?

2001.09.03ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் வெளியான 'வாசகர் திருமுகம்' பகுதியில் சி. தவம் என்பவரால் 'இவர்களுக்கு எழுதுநர் நியமனமா?' என்ற தலைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றைப் பார்த்தால் இவர் இலங்கை வர்த்தமானி என்ற ஒன்று உள்ளது என்பதனையோ, அதில் போட்டிப் பரீட்சைகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள், நியமனங்கள் என்பன வருகின்றன என்பதனையோ அறியாதவராக உள்ளார் என்று தெரிகின்றது.

தற்போது வெள்ளிக்கிழமைகளில் வருகின்ற தினகரன், டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளுடன் இந்த வர்த்தமானி வெளிவருகிறது. இனியாவது அவர் பத்திரிகையைப் பார்க்கவும்.

எந்தவொரு பதவியும் சேவை அடிப்படையில் குறிப்பிட்ட வீதத்தினருக்கு வழங்கவேண்டும் என அரசாங்க நியமனங்களில் கூறப்பட்டுள்ளது. வழமையாக வர்த்தமானி மூலம் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளைக் கோருவது பொது நிர்வாக அமைச்சுச் செயலாளர் அல்லது ஸ்தாபனப் பணிப்பாளர். ஆனால் இந்தப் பரீட்சை வடக்கு - கிழக்கு மாகாணத்துக்குள் உள்ளவர்களுக்கு என்ற காரணத்தினால் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு பத்திரிகை மூலம் விளம்பரம் செய்தது. இதற்கு முன் இது தொடர்பான 1999.02.19ஆம் திகதிய 1068ஆம் இலக்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

கனிஷ்ட சேவையில் உள்ளவர்களுக்கு இப்படியான போட்டிப் பரீட்சை மூலம் பதவி உயர்வு வழங்குவது அரசாங்கத்தின் நியமன தத்துவத்தில் ஒன்றாகும். பொது எழுதுநர் சேவையில் பத்து வருடம் சேவை செய்தவர்கள் இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சைக்கு தோற்றி பதவி உயர்வு பெறுகின்றனர். இது இவருக்குத் தெரியாதா? சேவையில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன.'

இவர் நான்கு வருடங்களாகப் பட்டதாரியாக இருக்கின்றார். இதுவரை பல திறந்த போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டன. ஏன் இவர் அவற்றுக்குத் தோற்றவில்லையா? பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனமும் வழங்கப்படுகின்றது. சிற்றூழியர் எல்லோரும் அரசியல் கட்சி ஆதரவாளர்களா? இப்பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் பல ஆண்டுகளுக்கு முன் சேவைக்குச் சேர்ந்தவர்களும், போட்டிப் பரீட்சையிலும் வந்தவர்கள். தற்போது அரசியல் மூலம் எத்தனையோ நியமனங்கள் வழங்கப்படுகின்றன. இது இவருக்குத் தெரியாதா? வங்கியில் வேலை என்றும் சமுர்த்தி என்றும் வேலை வழங்கப்படுகிறது.

அண்மையில் எழுதுநர் ஆள்சேர்ப்புக்கு திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இதனையும் இவர் பார்க்கவில்லையா? இப்பரீட்சைக்குத் தோற்றுபவர்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற ஒரு சிலருக்கே நியமனம் வழங்கப்படுகிறது. இப்பரீட்சையில் சித்திபெற்று எழுதுநர் நியமனம் பெற்றவர்கள் திறமையானவர்களாக இருப்பார்கள் - இவர்கள் முன்பே எழுதுநர் வேலைகளைப் பற்றித் தெரிந்திருப்பதனால். இது அவருக்கு விளக்கத்துக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

*மானிப்பாய்.* **கே.லிங்கம்.**

## துணிச்சலுடனும் சுயகௌரவத்துடனும்
# அமெரிக்காவின் தாக்குதலை ஆப்கானியர் எதிர்கொள்ளுவர்
## தலிபான் தலைவர் ஓமர் அறைகூவல்

இஸ்லாமாபாத்,செப்.16

விமானத் தற்கொலைத்தாக்குதல்களினால் அச்சமடைந்துள்ள அமெரிக்கா, மேற்கொள்ளவிருக்கும் பழிவாங்கும் நடவடிக்ஷககளை ஆப்கானிஸ்தானிய மக்கள் துணிச்சலுடனும் சுயமரியாதையுடனும் எதிர்கொள்ளத் தயாராகுமாறு தலிபான்களின் அதி உயர் தலைவர் முல்லா மொஹமட் ஓமர் அறைகூவல் விடுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் 'ஷரியத்' வானொலியான 'தலிபான் குரல்' மூலம் தனது மக்களுக்கு உரையாற்றிய போதே இவ்வாறு ஓமர் கேட்டுள்ளார்.

இஸ்லாமியத் தீவிரவாதியான ஒஸாமா பின்லேடனுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளதற்காக ஆப்கானிஸ்தானைத் தாக்குவதற்கு அமெரிக்கா சாக்குப்போக்கைத் தேடி வந்ததாகவும் -

ஆப்கானிஸ்தானிய மக்கள் மன வலிமையுடனும், பொறுமையுடனும், இருந்து துணிச்சலுடனும், சுயமரியாதையுடனும் அமெரிக்கத் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டும் என்றும் -

தலிபான் தலைவர் தனதுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், விமானத் தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற்ற மறுகணமே அதிபர் புஷ் உட்பட அமெரிக்க அரசு அதிகாரிகள் அனைவரும் பின்லேடனைக் குற்றஞ்சாட்டத் தொடங்கிவிட்டதாகவும் -

ஆகவே விசாரணைகள் பின்லேடனைக் குற்றவாளியாக்கும் திசையிலேயே செல்வதாகவும் -

உண்மையை வெளிக்கொணர்வதற்கு இது தடையாக இருப்பதாகவும் -

பெயர் குறிப்பிட விரும்பாத பாகிஸ்தானிய பாதுகாப்புத்துறை உயரதிகாரி ஒருவர் இணையத்தளம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பூரண விசாரணை நடத்தி, சான்றுகளைப் பெறாமல் ஆப்கானிஸ்தான் மீது அவசர நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்ளாது என்று தான் எதிர்பார்க்கவில்லை என்றும் அந்த உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். (ஒ-7)

## பாக்.குறித்து அமெரிக்காவிடம் இந்தியா தகவல்

புதுடில்லி,செப்.16

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதப் பயிற்சி முகாம்கள் பற்றிய விரிவான விவரங்கள் அடங்கிய கோப்புகளையும், அது தொடர்பான புகைப்படங்களையும், இந்தியப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் அமெரிக்கப் புலனாய்வுத் துறையான எவ்.பி.ஐ யிடம் கையளித்தனர்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீரிலும், ஆப்கானிஸ்தானுடனான பாகிஸ்தானியப் பகுதியிலும் உள்ள முகாம்களில் பல நாடுகளைச் சேர்ந்த இளைஞர்களுக்குத் தீவிரவாதப் பயிற்சி அளிக்கப்படுவதைக் காட்டும் 'வீடியோக்களையும் இந்தியா அமெரிக்காவிடம் வழங்கியுள்ளது. (ஒ)

## ஒவ்வொரு நிமிடமும் உலகில் 8 குழந்தைகள் மடிகின்றன

உலகம் முழுவதிலும் ஒவ்வொரு நிமிடமும் ஒரு மாதத்துக்கும் குறைந்த வயதுடைய 8 குழந்தைகள் உயிரிழக்கின்றன என்று 'யுனிசெவ்' அமைப்பு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

163 நாடுகளை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்தே இந்த முடிவு பெறப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவுகளை 'யுனிசெவ்' அமைப்பு அறிக்கையாக வெளியிட்டுள்ளது.

ஆய்வு முடிவுகளின்படி வருடம் தோறும் ஒரு வருடத்தில் பிறந்த ஒரு மாதத்துக்குள் உயிரிழக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 4 மில்லியன்களாகும்.

இதேசமயம், உலகில் சிறுவர் மரணவீதம் கடந்த தசாப்தத்தில் குறைந்துள்ளதாகவும் 'யுனிசெவ்' அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

## விமானத் தற்கொலைத் தாக்குதலால்
# அமெரிக்கா, பிரிட்டனில் அரபுகள் மீது வன்முறை

லண்டன்,செப்.16

அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து பிரிட்டனில் வாழும் இஸ்லாமியர்கள் துன்புறுத்தப்படுவதாகவும், அவர்களுக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல்கள் விடப்படுவதாகவும் பிரிட்டனிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பர்மிங்காமில் வாழும் முஸ்லிம்கள் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடனேயே நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மசூதிகளில் தொழுகை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்,

விமானத் தற்கொலைத் தாக்குதல்களையடுத்து, அமெரிக்காவிலும், அரபுகள் மீது பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவில் வாழும் அரபுகள் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு, அவர்களைத் தாக்க வேண்டாமென அதிபர் புஷ் தொலைக்காட்சி உரையில் வேண்டுகோள் விடுத்த போதும், அரபுகளுக்கு எதிரான அசம்பாவிதங்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்திய வம்சாவளிப் பஞ்சாபியர்கள் தலைப்பாகை மற்றும் தாடி வைதிருப்பதால் அவர்களும் இஸ்லாமிய அரபுகள் என்று தவறாகக் கருதப்பட்டு தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

தற்போது பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் வாழும் அரபுகள் மீது மேற்கொள்ளப்பட்ட நீடவடிக்கைகள் பெரிதானாலோ, அல்லது வேறு மேலை நாடுகளுக்குப் பரவினாலோ, அரபு நாடுகள் இந்தப் பிரச்சினையில் தலையிடக்கூடும் என்றும் -

அவ்வாறு நிகழ்ந்தால், தற்போதைய நிலைமை அமெரிக்காவுக்கு எதிராகத் திரும்ப நேரிடும் என்றும் -

அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ஒ-7)

## தற்கொலைத் தாக்குதல் குறித்து அமெரிக்காவில் தொடரும் அச்சம்!

அமெரிக்காவுக்குள் ஊடுருவிவிட்ட தற்கொலைத் தாக்குதலாளிகள் குறித்து அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் கலக்கமடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

விமானம் செலுத்தும் பயிற்சி பெற்ற, 50 பேரைக் கொண்ட தற்கொலைப் படையணி ஒன்று இந்த ஆண்டின் தொடக்கத்தில் அமைக்கப்பட்டதாகவும் -

அந்த அணியைச் சேர்ந்த 18 பேர் தற்போது நடத்தப்பட்ட விமானத் தற்கொலைத் தாக்குதல்களில் ஈடுபட்டு உயிரிழந்ததாகவும் -

விசாரணையில் தெரியவந்தது.

அமெரிக்க விமான நிலையங்களில கைது செய்யப்பட்ட தற்கொலைத் தாக்குதலாளிகள் எனக் கருதப்படும் சிலரை விசாரித்தபோதே தற்கொலைப் படையணி தொடர்பான தகவல்களை தெரிந்து கொண்டதாக எவ்.பி.ஐ. அதிகாரிகள் தெரிவித்தனர்.

இறந்தவர்கள் மற்றும் கைதானவர்களைத் தவிர எஞ்சியுள்ள தற்கொலைத் தாக்குதலாளிகள் பாரிய தாக்குதலில் ஈடுபடக்கூடுமென்றும் -

விமானத்தைத் தவிர்த்து வேறு வழிகள் மூலம் தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொள்ளும் அபாயம் உள்ளதாகவும் - அச்சம் வெளியிடப்பட்டது. (ஒ)

## பலஸ்தீனப் பகுதிகளில்
# இஸ்ரேல் படைகளின் ஆக்கிரமிப்பு தொடர்கிறது

ஜெருஸலேம்,செப்.16

பலஸ்தீனப் பகுதிகளை ஆக்கிரமிக்கும் இஸ்ரேலியப் படைகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கை தொடர்வதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே தாம் ஆக்கிரமித்துள்ள ஜெனீன் நகரில் உள்ள பலஸ்தீன அரச கட்டடங்களை இஸ்ரேலியப் படைகள் டாங்கிகளைக் கொண்டு தாக்கி அழித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்குக்கரையின் ஜெரிக்கோ நகரைக் கைப்பற்றும் நோக்கில் இஸ்ரேலியப் படையினர் டாங்கிகள், மற்றும் கவசவாகனங்கள் சகிதம் முன்னேறி வருகின்றனர். இதனால் அங்கு பெரும் மோதல்கள் இடம் பெற்று வருகின்றன.

இஸ்ரேலியப் படையினரின் ஆக்கிரமிப்பை முறியடிக்க மக்களை வீதிகளில் இறங்கிப் போராடும்படி அங்குள்ள பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில் -

வெவ்வேறு இடங்களில் இடம் பெற்ற பல்வேறு மோதல்களில் 10 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்; 13 பேர் காயமடைந்தனர். (ம-10)

## அமெரிக்காவில் அவசரகாலநிலை

வாஷிங்ரன்,செப்.16

விமானத் தற்கொலைத் தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து அமெரிக்காவில் தேசிய அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதத் தாக்குதல்கள் தொடரக் கூடும் என்ற அச்சம் இருப்பதாலேயே அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டதாக அதிபர் புஷ் கூறினார்.

ஆப்கானிஸ்தானில் உள்ள ஒசாமா பின்லேடன் மீது படைபலத்தைப் பயன்படுத்த அமெரிக்க நாடாளுமன்றம் ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேலும் 4 ஆயிரம் கோடி டொலர்கள் அவசரகால உதவிக்கும் அது ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்த உதவித் தொகையில் 50 சதவீத நிதி தாக்குதல் நடத்தியவர்களைத் தேடிப்பிடிக்கப் பயன்படுத்தப்படும். (ஒ)

## அமெரிக்காவில் இரு ரயில்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

வாஷிங்ரன்,செப்.16

அமெரிக்காவின் ஓரா மாகாணத்தில் நேற்றுமுன்தினம் இரு ரயில்கள நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளன.

எதிரெதிராக ஒரே தண்டவாளத்தில் வந்த பயணிகள் ரயில் ஒன்றும் சரக்கு ரயிலுமே மோதி விபத்துக்குள்ளானதாகவும், ரயில்கள் மோதிய வேகத்தில் சரக்கு ரயில தீப்பிடித்துக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விபத்து இடம்பெற்றபோது பயணிகள் ரயிலில் 300க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர். எனினும் விபத்தில் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்துத் தகவல்கள் எதையும் வெளியிடப்படவில்லை.

மீட்புப் பணியாளர்கள் ஹெலிகள மூலம் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்றுள்ளனர். விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் தமது விசாரணையை ஆரம்பித்துள்ளனர். (ம-10)

## ஆசிய - ஆபிரிக்க விளையாட்டு பாதுகாப்புக் கருதி ஒத்திவைப்பு

புதுடில்லி,செப்.16

அமெரிக்கா மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திப் பேரழிவை ஏற்படுத்தியதை அடுத்து பாதுகாப்புக் காரணங்களுக்காக புதுடில்லியில் நடைபெற இருந்த ஆசிய - ஆபிரிக்க விளையாட்டுப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் கூடிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

அமெரிக்காவில் நிலைமைகள் சீரடைந்த பின்னர் போட்டிகள் நடைபெறும் புதிய திகதி அறிவிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

முதறாடவையாக ஆசிய - ஆபிரிக்கப் போட்டிகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9)



பாகிஸ்தானைச் சேர்ந்த தம்பதிகளான 255 செ.மீ உயரமான ஆஸாக் மகூட் (வயது 25), 210 செ.மீ. உயரமான ஜெயினாபீவி (வயது 28), ஆகியோர் தாமே உலகின் அதி உயரமான தம்பதிகள் என்பதனை உறுதிப்படுத்த ஒவ்வொரு நாடாகச் சென்று வருகின்றனர். அவர்கள் இருவருடன் உலகில் மிகக் குள்ளமானவர் என்பதை உறுதிப்படுத்துவதற்காக 69 செ.மீற்றர்களே உயரமான யூனிஸ் எட்வன் (வயது 29) என்ற ஜோர்டானியரும் உடன் சென்று வருகிறார். கடந்த புதன்கிழமை இவர்கள் மூவரும் ஜோர்டான் சென்றபோது கொடுத்த 'போஸ்' இது.

## மற்றொரு கட்டடமும் இடியும் நிலை

நியூயோர்க்,செப்.16

அமெரிக்காவில் உலக வர்த்தக மையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து, அதனருகே உள்ள மற்றொரு கட்டடமும் இடிந்து விழும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுவரை உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரங்கள் உட்பட 4 கட்டடங்கள் இடிந்து நொறுங்கியுள்ளன.

நேற்றுமுன்தினம் மன்ஹட்டன் பகுதியில் பெய்த மழையால் உலக வர்த்தகமைய இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் பாதிப்படைந்துள்ளன. (ஒ)

# இறையரசைக் கட்டி வளர்த்ததால் மரியாள் திருச்சபையின் தாயானாள்

கத்தோலிக்கர்களால் மாதாவின் பிறப்பு விழா தற்போது கொண்டாடப்படுகிறது. அது குறித்த கட்டுரை இது.

எங்கெல்லாம் கத்தோலிக்கர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் தற்போது மிகப்பெரிய அளவில் மாதாவின் பிறப்பு விழா கொண்டாடப்படுகிறது. எவ்விதம் கிறிஸ்து பிறப்பு விழா (கிறிஸ்மஸ்) உலகெல்லாம் கொண்டாடப்படுகிறதோ அதற்கடுத்தாற் போல் எடுக்கப்படும் ஓர் உன்னத பிறப்பு விழாவென்றால் அது மரியன்னையின் பிறந்த நாள் விழாவாகத்தான் இருக்கும்.

விண்ணையும், மண்ணையும் படைத்த இறைவன் படைப்பின் சிகரமாக மனிதனைப் படைத்தார். படைத்தவன் சொல்லை மீறி பாவத்தில் வீழ்ந்த மனிதனை மீட்க இறைவன் திட்டங் கொண்டான் முதற்பெற்றோர் பாவம் புரிந்த பின் அலகையின் மேல் பெறும் வெற்றியைப் பற்றிய வாக்குறுதி அவர்களுக்கு அளிக்கப்பட்டது. இந்த வாக்குறுதியில் ''உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் இடையே பகையை உண்டாக்குவோம்; அவள் உன் தலையைக் காயப்படுத்துவாள்'' (தொ. நூ 3: 15) என்ற தேவ வசனத்தில் அன்னை மரியாள் முன் குறிக்கப்படுகிறாள்.

இறைவனின் ஆணையால் தூது சொல்ல வந்த வானவன், ''அருள் மிகப்பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருகிறார் (லூக் 1: 28) என்று கூற மரியாளும் ''இதோ ஆண்டவருடைய அடிமை; உமது வார்த்தையின் படியே எனக்காகட்டும்'' (லூக் 1;38) என்று மறுமொழி கூறினாள். இதனால் மரியன்னை தன்னை முற்றிலும் இறைசித்தத்துக்கு அர்ப்பணிக்கிறார். மீட்புத் திட்டத்திற்கு முற்றிலும் ஒத்துழைக்க ஒப்புக்கொண்டு மீட்பரின் தாயாகின்றாள்.

உருவிலானைக்கருத்தாங்கி, சுமந்து, பெற்றெடுக்கும் பெரும் பேற்றை பெற்றது மட்டுமல்லாது, கருவறையில் அவரைச் சுமந்த நாள் முதல் கல்லறை வரையும் அவள் பங்கு கொள்கிறாள்; பல இன்னல்களைச் சந்திக்கின்றாள். ஏரோதனின் கொடியவாளில் இருந்து குழந்தை யேசுவைத் தப்புவிப்பதற்காக அகதியாக அலைந்தாள். ஆலயத்தில் ஆனாள், சிமியோன் கூறிய

## ஞாயிறு நற்பிரசாதம்

வார்த்தைகளை மனதில் ஏற்றுச் சிந்தித்துக் கலங்கினாள். பன்னிரு வயதில் சிறுவன் யேசு காணாமற்போனபோது துடி துடித்துத் தேடிக் கண்டுபிடித்தாள். அவரை வளர்த்து ஆளாக்கியது மட்டுமல்லாது சிலுவையடி வரைக்கும் அவரைப் பின் தொடர்ந்து அவர் சிலுவையிலே பலியாகும் போது அருகே நின்று அழுது துடித்து எம் மீட்புக்காகத் தனது மகனைத் தந்தைக்கு அர்ப்பணித்தவள் இந்தத் தியாகத்தாய்.

### மனுக்குலத்தின் தாய் மரியாள்

கொடூரமான பாடுகளை ஏற்று சிலுவை மரத்தில் தொங்கிய யேசு தாயில்லா வாழ்வு சீரில்லா வாழ்வு என்பதை உணர்ந்து ''அம்மா இவரே உன் மகன் — இவரே உன் தாய்'' (யோ: 19: 26-27) என்று கூறி மனுக்குலத்தைத் தமது அன்னையிடம் ஒப்படைக்கின்றார். அந்தத்துன்ப வேளையிலேமரியன்னை இந்த உலக மாந்தர் அனைவரையும் பெற்றெடுக்கின்றாள். இதனால் மனுக்குலத்தின் தாயாகினாள் மரியன்னை. அன்று தொட்டு நாம் அன்னையின் கன்னிமையில் விசுவாசம் வைத்து அவளின் பிள்ளைகளாக வாழ்ந்து வருகின்றோம்.

யேசு விண்ணகம் சென்ற பின் அப்போஸ்தலரோடும், ஆதித்திருச்சபையோருடனும் இணைந்து இறையரசைக் கட்டி வளர்த்ததால் அன்னை திருச்சபையின் தாயாகினாள். மரியன்னை எப்போதும் தன் மக்களோடு இருந்து வழி நடத்தி வருகின்றாள்.

நெருக்கிடையான வேளைகளிலும், தம் மக்கள் துன்பப்படும் வேளையிலும் அன்னை பற்பல இடங்களில் காட்சி கொடுத்து மக்களை நெறிப்படுத்தி வந்துள்ளாள். பிரான்ஸ் நாட்டில் லூர்து, போர்த்துக்கலில் பாத்திமா, இத்தாலியில் லொரெட்டா, இங்கிலாந்தில் வால்சின்ன, அயர்லாந்தில் கனாக், மெக்சிக்கோவில் கொண்ட லோப், இந்தியாவில் வேளாங்கண்ணி ஆகிய தலங்களிலும் காட்சி கொடுத்து யேசுவின் மீட்புப் பணியில் தாமும் பங்கெடுத்து வருகின்றாள். இலங்கையிலும் மருதமடுப்பதியில் அன்னை அமர்ந்திருந்து வரங்களை வாரி இறைத்துக் கொண்டே இருக்கின்றாள். ★

உதயம்

மல்லாகம்

## பருத்தித்துறையில் மத்திய மருந்தகம் அமைக்க விரைவில் புதிய இடத்தில் காணி

வடமராட்சி, செப். 16

பருத்தித்துறையில் மத்திய மருந்தகம் அமைப்பதற்கு காணி ஒன்றைத் தெரிவுசெய்யும் நடவடிக்கை யாழ். அரசாங்க அதிபரால் மேற்கொள்ளப்படவுள்ளதாக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மருந்தகம் அமைப்பதற்கு ஆத்தியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள காணி ஒன்று முன்னர் தெரிவு செய்யப்பட்டதும்—

பருத்தித்துறையைச்சேர்ந்த பல்வேறுதரப்பினரையும் உள்ளடக்கிய 65 பேர் கொண்ட குழு அதற்கு ஆட்சேபம் தெரிவித்திருந்ததும் —

தெரிந்ததே.

இதனையடுத்து யாழ். அரச அதிபர் பருத்தித்துறை பிரதேச செயலருக்கு எழுதியுள்ள கடிதத்தில், பருத்தித்துறையில் மத்திய மருந்தகத்தை அமைக்க எடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகளையும் இடைநிறுத்தி வைக்குமாறும், இதற்கான காணியைத்தெரிவு செய்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினை சம்பந்தமாக பூரண அறிக்கை ஒன்றைத் தனக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுள்ளார்

அத்துடன் மத்திய மருந்தகத்துக்கான காணியைத் தெரிவு செய்வது சம்பந்தமான தீர்மானம் விரைவில் எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

(ஐ-173)

## இராஜகோபுரம் கட்டும் பணி ஆரம்பம்

சுழிபுரம், செப். 16

சுழிபுரம்—பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலயத்தில் தெற்கு வாசல் இராஜகோபுரம் ஒன்றினைப் புதிதாகக் கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் இதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் நடைபெற்றது.

மேற்படி ஆலய அர்ச்சகர் எஸ். கதிர்காமத்தம்பி மூன்று இலட்சம் ரூபா செலவில் தனது உபயமாக இதனைக் கட்டி முடிக்கவுள்ளார்.

புதிய கோபுரம் அடுத்த வருடம் ஜூலை மாத வருடாந்த உற்சவத்திற்கு முன்வர் பூர்த்தியாக்கப்படவுள்ளது. இக் கோபுரத்தை அராலியூர் வே. யோகேஸ்வரன் சிற்பாசாரிக் குழுவினர் அமைத்து வருகின்றனர்.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட முன்வாசல் கோபுர வேலைகள் யாவும் தற்போது பூர்த்தியாகும் நிலையில் உள்ளன. (ஐ-7-28)

## உடுவில் கோட்ட அதிபர்கள் கூட்டம்

வலிகாமம் தெற்கு, செப். 16

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் என்று உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் அறிவித்துள்ளார். (ஐ-152)

## தபால்கள் வந்தன

யாழ்ப்பாணம், செப். 16

காங்கேசன்துறைக்கு கடந்த வியாழனன்று வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 389 தபாற்பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 48 தபாற் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தபாற்றிணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-10)

## மலசல கூடம் அமைப்பு

அரியாலை, செப். 16

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் மாணவர்களின் வசதி கருதி புதிதாக மலசல கூடம் ஒன்றை ஜி.ரி. இசற் நிறுவனம் அமைத்துக் கொடுத்துள்ளது. (ஐ-17)

## வலி. வடக்கில் இரு குளங்கள் புனரமைப்பு

வலிகாமம் தெற்கு, செப். 16


வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள இரண்டு விவசாயக் குளங்கள் பட்டினிக்கெதிரான நிறுவனத்தினரால் புனரமைப்புச் செய்யப்பட்டு விவசாயிகளின் பாவனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை துர்க்காபுரம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள புல்லாந்திக்குளம், மல்லாகம் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கும்பவைக்குளம் ஆகிய இரண்டு விவசாயக்குளங்களுமே புனரமைப்புச் செய்யப்பட்ட குளங்களாகும்.

புனரமைப்புச் செய்யப்பட்ட குளங்களை வைபவரீதியாகத் திறந்து வைத்த நிகழ்வில் பட்டினிக்கெதிரான நிறுவன திட்ட முகாமையாளர் பெரடரிக் பரேர (Frederic Bardou), உதவித்திட்ட முகாமையாளர் ஆர். பகிரதன், பொறியியலாளர் ஆர். யோகரட்ணம், திட்ட உத்தியோகத்தர் க. இராசேந்திரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி பாஸ்கரன் விசேட விருந்தினராகக் கலந்து கொண்டார். (ஐ-152)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவகுரு பாக்கியம்

(சின்னமணி)

(செட்டியவூர், தொண்டமனாறு)

மலர்வு 12-11-1918 உதிர்வு 28-08-2000

திதி:- சதுர்த்தசி - 16—09—2001

எம் குலவிளக்கே! ஆண்டுகள் பல சென்றாலும்
இப் புவியில் நாம் உள்ளவரைக்கும்
எம் உள்ளங்களில் உங்கள் நினைவுகள்
என்றென்றும் அழியவே அழியாது.


உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கரணவாய் மத்தி,
நவிண்டில், கரவெட்டி.

குடும்பத்தினர்.
(92171)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 22 — 01 — 1947



மறைவு 17 — 08 — 2001

### அமரர் சுப்பிரமணியம் இராசரத்தினம்

(உரிமையாளர்: பிள்ளையார் ஸ்ரோர்ஸ், இணுவில்)

பெற்றெடுத்துப் பேணிவளர்த்து
அன்புகாட்டி எமை அரவணைத்து
பாரினிலே உயர்ந்து வாழவைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
நல்லூர் கந்தனைத் தரிசிக்கச் சென்றனையோ?
சொல்லாமல் சென்றீர் ஐயா! துடிக்கிறோம்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு அழியாது!

எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (16-09-2001) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நிகழ்கின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

''சரஸ்வதி இல்லம்''
இணுவில் தெற்கு, இணுவில்.

(92321)

உதயன்

## மருத்துவ மாணவரின் பிரச்சினைக்கு மருந்து!

யாழ்.மருத்துவ பீட மாணவர்களின் அவலநிலையை அப்படியே அப்பட்டமாக அம்பலப்படுத்தியிருக்கின்றார் மருத்துவ மாணவ ஒன்றியச் செயலாளர்.

மிக விரைவாக மாணவர்களை மருத்துவ பீடத்துக்கு அனுமதிப்பதில் - உள்ளெடுப்பதில் - ஆர்வம் காட்டும் பல்கலைக்கழக நிர்வாகம், அதே வேகத்தில் அவர்கள் தமது கல்வியைப் பூரணப்படுத்தி மருத்துவப் பட்டதாரிகளாக வெளியே அனுப்புவதிலும் சிரத்தை காட்ட வேண்டும்; அதற்கான வாய்ப்பை அந்த மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதை உறுதிப்படுத்த வேண்டும் - என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார் அவர்.

1992 ஆம் ஆண்டில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எழுதி, அதன் அடிப்படையில் கொழும்பு மருத்துவ பீடத்தில் உள்வாங்கப்பட்டவர்கள் தமது கற்கைநெறியையும் பூர்த்தி செய்து வெளியேறி வைத்தியசாலையில் ஒரு வருட உள்ளகப் பயிற்சியையும் பூர்த்தி செய்யும் நிலையில் உள்ளனர்.

ஆனால் அதே ஆண்டில் உயர்தரப் பரீட்சை எடுத்து அதன் அடிப்படையில் யாழ்.மருத்துவபீடத்துக்குத் தெரிவானவர்கள் இன்னமும் இங்கு இறுதியாண்டு கல்வி கற்கும் நிலையிலேயே உள்ளனர் என்ற வேதனையான தகவலையும் அவர் அம்பலப்படுத்தியிருக்கின்றார்.

ஐந்து வருடத்தில் முடிக்க வேண்டிய கல்வியை இந்த மாணவர்கள் ஏழு, எட்டு ஆண்டுகளாக இழுபட்டு கற்று முடிப்பது தனிப்பட்ட முறையில் அவர்களைப் பாதிப்பது மட்டுமன்றி அது சமுதாயத்தையும் பாதிக்கும் ஒரு குற்றமாகும்.

இந்தக் குற்றம் இடம்பெறாமல் - சமூகப் பயன்பாடு வீணாகாமல் - பார்த்துக்கொள்வது சமூகக் காவலர்களின், அதிகாரிகளின் கடமையாகும்.

மருத்துவ பீடத்திலும், யாழ். போதனா வைத்தியசாலையிலும் போதிய அளவு விரிவுரையாளர்கள், வைத்தியர்கள் இல்லாதது இந்த இழுபறி நிலைக்குக் காரணம் என்பது நமக்குத் தெரிந்த தகவல்தான்.

இந்த மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறும் வைத்தியர்களே இந்த மருத்துவ பீடத்தையும் மண்ணையும் திரும்பிப் பார்க்காமல் ஓடும்போது, இந்த அவலநிலையை நீக்குவதற்கு வெளியிடத்திலிருந்து வேறு விரிவுரையாளர்கள், வைத்தியர்கள் வருவார்களா?

இந்த மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறுவோர் தங்களுக்குள் ஓர் அட்டவணையைப் போட்டாவது - மாறிமாறி குறுகிய காலத்துக்காவது - இங்கு வந்து நின்று இந்தப் பிரதேசத்தை - இந்த மாணவர்களை - ஈடேற்றப்படுத்த முயற்சிக்க வேண்டும் என்ற கோரிக்கை கடந்த பதினைந்து ஆண்டுகளாக அவ்வப்போது இந்த மண்ணிலிருந்து எழுந்துகொண்டுதான் இருக்கின்றது. அவ்வப்போது இருந்த மருத்துவ மாணவர்களும், அவர்களது மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் தனிப்பட்ட முறையிலும், பொதுவாகவும் இத்தகைய கோரிக்கையை முன்வைத்தே வந்திருக்கின்றார்கள். அப்படி ஒரு கோரிக்கையை முன்வைத்து வலியுறுத்திய மாணவர்களே பின்னர் தாங்கள் சித்தியடைந்து மருத்துவ பீடத்தை விட்டு வெளியேறியதும் அதை மறந்துவிடுவது எமது அனுபவப் பாடமாக உள்ளது.

மருத்துவ மாணவர்கள் தம் கல்வியைப் பூரணப்படுத்திக்கொண்டே மருத்துவ பீடத்தை விட்டு வெளியேற வேண்டும். விரிவுரையாளர் பற்றாக்குறை என்பதற்காக நாங்கள் அவர்களை அரைகுறை வைத்தியர்களாக பணிக்கு அனுப்ப முடியாது. அதற்காக அவர்களை வருடக்கணக்கில் மருத்துவ பீடத்தில் இழுபடவும் விட முடியாது; விடக் கூடாது.

இதற்கு மாற்று - அவசர - வசதிகளை நிர்வாகிகள் கண்டுபிடிக்க வேண்டும். மருத்துவத்துறை சார்ந்த நமது அறிஞர்கள் ஒவ்வொருவரும் குறுகிய காலத்துக்காவது நமது சமூகத்துக்குப் பணியாற்றுவதற்காக இங்கு வருவார்களேயானால் இப்பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்துவிடும்.

கற்றுக்கொண்டிருக்கும் மாணவ அணிகளை கல்வியைப் பூரணப்படுத்தி வெளியேற்றுவதற்கு தாமதம் நேர்வதால், புதிதாக அணிகள் மருத்துவ பீடத்துக்குள் நுழைவதை எதிர்க்க வேண்டிவரும் என மருத்துவ மாணவர் பிரதிநிதி எச்சரிக்கை விடுவதும், நியாயமற்றதும் ஏற்றுக்கொள்ள முடியாததும் மக்கள் எதிர்ப்பைத் தோற்றுவிக்கும் முயற்சியும் ஆகும் என்பதையும் கூறி வைக்க விரும்புகிறோம்.

---

அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டதால்

# ஜேர்மனியில் உண்ணாவிரதமிருந்த ஈழத் தமிழர் விடுதலையானார்

பேர்லின்,செப்.16

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட நிலையில் கடந்த 20 நாள்களாக உண்ணாவிரதம் இருந்து வந்த ஈழத் தமிழரான லஷ்மணன் பகீந்திரன் நேற்றுமுன்தினம் தடுப்புக் காவலில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்.

ஜேர்மன் உள்துறை அமைச்சரின் விசேட உத்தரவின் பேரில் இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என சர்வதேச செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

இதேவேளை -

பகீந்திரனுடன் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஈழத் தமிழர்களான சந்திரலிங்கம் தர்ஷனன், சச்சிதானந்தன் லவக்குமார், கதிரவேலு குலசேகரம் ஆகியோர் தொடர்ந்தும் பொலீஸாரின் காவலில் உள்ளனர் என்றும் - அறிவிக்கப்பட்டது. (க-7)

## சிறுவர் சேமிப்பு பரிசில் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.16

அச்சுவேலி மக்கள் வங்கி ஏற்பாடு செய்துள்ள வாடிக்கையாளர் தினமும், சிறுவர் சேமிப்புக்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அச்சுவேலி புனிததெரேசா மகளிர் கல்லூரி மண்டபத்தில் கிளைமுகாமையாளர் மு.சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் மக்கள் வங்கியின் வடலய உதவிப் பொது முகாமையாளர் சி. இளம்பிறைநாதன், பிரதமவிருந்தினராகவும், மக்கள் வங்கியின் யாழ்ப்பாணப் பிராந்திய முகாமையாளர் சு. சிவபாதம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

18.09.2000 அன்று அச்சுவேலியில் ஆரம்பிக்கப்பட்ட யாழ் எஸ்ரான்லி வீதி மக்கள்வங்கிக் கிளையின் மேற்படி கருமபீடம் ஓர் ஆண்டு சேவையினைப் பூர்த்தி செய்யும் இத் தருணத்தில் சிறுவர் சேமிப்புக் கணக்குகளில் பரிசு பெறத் தகுதியுடைய இருநூறு பேருக்கான சேமிப்பு ஊக்குவிப்புப் பரிசில்கள் இவ்வைபவத்தில் வைத்து வழங்கப்பட உள்ளன. (ஐ-7)

---

## நாட்டு நடப்பு

உண்டி - V

குக்கரைத் தூக்கி வீசு
குசினியில் அடுப்பை மூட்டு
தக்க நல் விறகு மூட்டி
தனிப் பானையில் அரிசி போடு
பக்குவமாய் நாலு கறி
பாயாசத்தோடு காய்ச்சு
சிக்கனமாய் இலையைப் போட்டு
சீராக இருந்து உண்டால்
விக்கினம் எதுவும் இன்றி
விருப்புடன் வாழ்வாய் நீடு!

*- விகடகவி.*

---

# போதிய பணியாளர்கள் இன்றி இயங்கும் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகம்

## முறைப்பாடு பதியச் செல்வோர் சிரமம்

யாழ்ப்பாணம்,செப்.16

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் போதிய உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தினால் அங்கு தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கவெனச் செல்கின்ற பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரு வருட காலத்துக்கும் மேலாகப் போதியளவு உத்தியோகத்தர்கள் இல்லாதநிலையில் இந்த அலுவலகம் இயங்கிவருகிறது. இதனால் தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கவும் மற்றும் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளவும் அங்கு செல்லும் பொதுமக்கள் பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. தூர இடங்களில் இருந்து மேற்படி அலுவலகத்துக்கு வருவோர் இதனால் பல சிரமங்களையும் எதிர்நோக்கவேண்டியுள்ளது.

அலுவலகத்துக்கான இணைப்பாளர் மற்றும் விசாரணை அதிகாரி ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதன் பின்பு நேர்முகப் பரீட்சைக்கான திகதி குறிக்கப்பட்ட பின்பும் இறுதி நேரத்தில் அது பிற்போடப்பட்டுள்ளது. இவ்வாறு இரண்டு தடவைகள் நேர்முகப் பரீட்சைக்கான திகதி குறிக்கப்பட்டு இரண்டு தடவையும் அது பிற்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

---



யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி ஆசிரியர் சி.பத்மராஜா எழுதிய 'இந்தியத் தத்துவச் சுருக்கம்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

கலாநிதி எஸ்.சிவலிங்கராசா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறை விரிவுரையாளர் சி.விஜயகுமார் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன், சட்டத்தரணி க.கேசவன், நூலாசிரியர் ஆகியோர் மேடையில் அமர்ந்துள்ளனர். (ஐ)

---

# வல்லிபுர ஆழ்வார் கோயில் மஹோற்சவம் நாளை ஆரம்பம்

வடமராட்சி,செப்.16

சரித்திரப் பிரசித்திபெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 17 தினங்கள் மஹோற்சவம் நடைபெறும்.

பிரதான உற்சவங்களான சப்பறத் திருவிழா எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கும் தேர்த்திருவிழா அடுத்த மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கும், சமுத்திரத் தீர்த்தத் திருவிழா மறுநாள் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கும், கேணித் தீர்த்தம் அதற்கடுத்த நாள் 3ஆம் திகதி புதன்கிழமை பகல் 10 மணிக்கும் இடம்பெறும்.

கேணித் தீர்த்தத்தன்று மாலை 4 மணிக்கு கொடி இறக்கம் நிகழும்.

இம்மஹோற்சவ தினங்களில் பருத்தித்துறையிலிருந்து வல்லிபுரக் கோயிலுக்குத் தினமும் காலை 9 மணியிலிருந்து 3 மணி வரை பஸ் சேவைகளை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ நடத்தும்.

பிரதான உற்சவ நாளகளில் அதிகாலை 5 மணிமுதல் இரவு 8 மணி வரை குடாநாட்டின் பலபகுதிகளுக்கும் விசேட வ.பி.போ.ச. பஸ், மினி பஸ் சேவைகள் நடைபெறும்.

மஹோற்சவத்தை ஒட்டி சுகாதார வசதிகள் கோயில் பரிபாலன சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-173)

---

# 19ஆம் 21ஆம் திகதிகளில் கட்டாயக் கல்வித் தினம்

யாழ்ப்பாணம், செப்.16

'யுனிசெவ்' நிறுவனத்தினால் எதிர்வரும் 19ஆம், 21ஆம் திகதிகளில் பிரகடனம் செய்யப்பட்டுள்ள கட்டாயக் கல்வித்தினம் தீவக வலய பாடசாலைகளிலும் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தமது வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளைப் பாடசாலைக்குச் செல்ல வைப்பதும், வரவு ஒழுங்கீனமான பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்ல வைப்பதும் இத்தினங்களின் முக்கிய நோக்கமாகும் எனத் தெரிவித்துள்ளார். (ஐ-7)

---

## நாளை

புரட்டாதி 01
திங்கட்கிழமை
திதி: அமாவாசை
பிற்பகல் 4.56 வரை.
நட்சத்திரம் : பூரம்
முற்பகல் 10.44 வரை.
அமாவாசை விரதம்
மஹாளயம் முடிவு
சுபநேரம் : 12.03 - 1.33
ராகுகாலம் : 7.33 - 9.03
(பழைய நேரப்படி)

---

## குடாநாட்டில் தேங்காய் விலை உயர்வு

குருநகர்,செப்.16

குடாநாட்டில் தேங்காய் விலை உயர்ந்து செல்கிறது. முன்னர் 25 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட தேங்காய் ஒன்று தற்போது 35 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. (ஐ-51)

---

## உதயவாக்கு

போர் தொடங்கிவிட்டதும் சட்டங்கள் ஊமையாகிவிடுகின்றன.

---

# சுதந்திர ஆணைக்குழுக்கள் குறித்து ஜே.வி.பியினர் ஐ.தே.கவுடன் பேசுவர்

நீதி, தேர்தல், பொதுச்சேவை, பொலீஸ் ஆகியன தொடர்பான சுதந்திர ஆணைக்குழுக்கள் அமைப்பது குறித்து ஜே.வி.பி. ஐ.தே.கட்சியுடன் கலந்துரையாடவிருக்கின்றது.

கடந்த வியாழன் இரவு அரசுப் பிரதிநிதிகளுடன் ஜே.வி.பி. பிரதிநிதிகள் இந்த ஆணைக்குழுக்கள் தொடர்பான நகல் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

அதைத்தொடர்ந்தே இந்த விடயம் தொடர்பாக ஐ.தே.கட்சியின் பிரதிநிதிகளுடன் ஜே.வி.பி. பிரதிநிதிகள் பேச்சு நடத்தி அவர்களின் நிலைப்பாட்டைக் கேட்டறிவர் என்று தெரிவிக்கப்பட்டது. (க-3)

---

கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



கவர்ச்சியான பொருள்களாக
காட்சிதரும் கண்ணிவெடிகள்...
உங்கள் அன்புக் குழந்தைகளுக்கு
அவை பற்றி எச்சரியுங்கள்!

உடுவில் மத்தி (வடக்கு) பிரிவு மக்களினதும்
உடுவில் மத்தி சனசமூக நிலையத்தினரதும்
மனமார்ந்த

## வாழ்த்துதலும் - பாராட்டுக்களும்



வலிகாமம் தெற்கு பிரதேச செயலர்
பிரிவில் கிராமஅலுவலராகக்
கடமையாற்றி கடந்த
08.08.2001இல் ஓய்வுபெற்ற
**திருவாளர் S.R.யேசுபாலன்**
அவர்களையும் அவரது குடும்பத்தினர்
களையும் இறைவன் அருளால் எல்லா
நலனும் பெற்று பல்லாண்டு காலம்
நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

உடுவில் மத்தி (வடக்கு) மக்களும்
உடுவில் மத்தி சனசமூக நிலையத்தினரும்.
(92318)

## ஓராண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில்
25 - 02 - 1951



ஆண்டிவன் அடியில்
25 - 09 - 2000

### திருமதி இராஜேஸ்வரி ஆனந்தகுரு

திதி: 16.09.2001

எமது அன்புத்தாயே! எம்குடும்ப ஒளிவிளக்கே!
உயர்வு காண்பதற்கே ஓயாது உழைத்த அன்னையே
ஆறுதல் கூற யாரும் இல்லையம்மா!
ஆண்டு ஒன்று உருண்டோடி விட்டதே!
ஆறவில்லை எம்துயரம், மீளவில்லை உம் நினைவிலிருந்து.
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ம.இராசையா,
*முக்கராவத்தை, ஊசிக்காடு,*
*வல்வெட்டித்துறை.*

தாய், தந்தை,
கணவன், பிள்ளைகள்.
(92182)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
25 - 05 - 1947



உதிர்வு
16 - 09 - 1998

அமரர்

### சரவணை மாணிக்கவாசகர்

(உரிமையாளர், ரூபி போட்டோ யாழ்.)

பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
நேசமுடன் எம்மை ஆளாக்கி
தேசம் புகழ வைத்த எம் தெய்வமே!

மெல்லெனப் பேசிய நாள்களும்
துன்பங்களைத் தீர்த்து வைத்து
சிறந்த ஆசானாய்த் திகழ்ந்த
நாள்களும் மறக்க முடியுமா?
எல்லையில்லாத அன்புள்ளம் கொண்டு
இறைபதம் அடைந்த உங்களை
சொல்லிலும் அடக்க முடியாது ஐயா!

ஆண்டுகள் மூன்று மறைந்தாலும்
இவ்வுலகில் நாங்கள் இருக்கும் வரை
உங்கள் நினைவுகள்
நீண்டு கொண்டே போகும் ஐயா!

*இல.05, பலாலி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P. : 3386

என்றென்றும் உங்கள் நினைவுடன்:
போட்டோ ரவி அன் வீடியோ
நிறுவனத்தினர்.
(92264)

## தீக்குச்சியால் நிகழ்ந்த விபரீதம்

யாழ்ப்பாணம்,செப்.16

விளக்கைக் கொளுத்திவிட்டு தணிக்காமல் எறிந்த தீக்குச்சியில் இருந்து பற்றிய நெருப்பில் எரிந்து குடும்பப் பெண் ஒருவர் உடல் முழுவதும் எரிகாயங்களுக்குள்ளானார்.

கொடிகாமம், கச்சாய் வீதிப் பகுதியில் கடந்த வியாழன் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் கம்பர் பராசக்தி (வயது 45) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இந்தப் பெண்மணி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.(க-15)

## 120 மாணவர் புலமைப்பரிசில் பெறத் தெரிவு

தென்மராட்சி,செப்.16

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் கல்வி பயிலும் 120 மாணவர்கள் ஜனாதிபதி விசேட புலமைப்பரிசில் பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வகுப்பிலும் தலா 20 மாணவர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விவரங்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிடலாம் என்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (க-117)

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.16

அளவெட்டி தெற்கு அ.மி.த.க. பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களால் நடத்தப்படும் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கந்தரோடை சவாரித்திடலில் நடைபெறவுள்ளது. (ஐ-10)

## ஞாபகார்த்த கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.16

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் முன்னாள் தலைவரும் மாபெரும் இடதுசாரி இயக்கப் போராளியுமான தோழர் ஆஸ்கார் பெரேராவின் ஞாபகார்த்தக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரியகுளம் சந்திக்கு அருகில் உள்ள தமிழ எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் தோழர் க.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தோழர் சொ.சிவபாலன், தோழர் த.குகேந்திரன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.(ஐ-10)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,செப்.16

யாழ்.லயன்ஸ் கழகமும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் வலயம் ஒன்று சமுர்த்தி செயலணிகளும் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இந்த முகாமில் நீரிழிவு, இரத்த அழுத்தம், சிறுநீர் மற்றும் பொது வைத்தியம் ஆகியவற்றுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. சிறுவர்கள் மற்றும் பெரியோர்களும் இதில் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## கலாசாரப் போட்டிகள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாட்ட ரீதியிலான கலாசாரப் போட்டிகள் எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் யாழ்.ஸ்ரான்லிக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளுக்குத் தேவையான பின்னணி வாத்தியங்கள் மற்றும் ஏற்பாடுகளை போட்டியாளர்களே ஒழுங்குசெய்ய வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய மட்டத்திற்குத் தெரிவுசெய்யப்படும் வீரர்கள் தங்கள் பிரயாணக் கட்டணங்களை அவர்களே பொறுப்பேற்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியாளர்களுக்குரிய அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவை கிடைக்கப்பெறாதவர்களை கச்சேரியடியில் அமைந்துள்ள யாழ்.அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும். தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-9-ரி)

## கொழும்பில் தங்குமிட வசதி

சகல வசதிகளுடன், குறைந்த செலவில், நிறைந்த சேவை புரியு சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில No. 89, HINN APPUHAMY MAWATHA, CO -13 இல் அமைந்துள்ளது
"VANIE INN" லொட்ஜ்.
தங்குமிடம் தேவைப்படுவோர் மேற்படி விலாசத்துக்குப் பதிவு செய்து வரலாம்.
மேலதிக விவரமறிய:
*T.P.01-433182, 472582.*
(91605) - முகாமையாளர்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

16-09-2001



### செல்வன் ஸ்ரெவோண்

ஜேர்மனியை வசிப்பிடமாகக் கொண்ட
**யோண்சன் - றெனி** தம்பதிகளின் செல்வப் புதல்வன்

ஸ்ரெவோண்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (16.09.2001) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார் குடும்பம், அத்தைமார் குடும்பம் மற்றும் உறவினர்கள் ஸ்ரெவோணை இறைவன் அருள்பெற்று, பல்கலையும் கற்று பெற்றோரும் மற்றோரும் போற்ற சான்றோனாகப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*42/2, கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (92226)
- அம்மப்பா.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

(16-09-2001)

HAPPY



BIRTHDAY


### செல்வன் சி.சஜித்

தொண்டமானாறு செட்டிய ஊரைச் சேர்ந்த
**சிவலிங்கம் - நாகேஸ்வரி தம்பதிகளின்**
அருந்தவப் புதல்வன் செல்வன்

### சஜித்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று(16-09-2001) ஞாயிற்றுக் கிழமை தனது இல்லத்தில் வெகுகுதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் சகல செளபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*லிங்கம் ஸ்ரோர்ஸ்,*
*நீர்வேலிச் சந்தி.* (92224)
- கந்தையா சிவலிங்கம். *(அப்பா)*



# அன்பார்ந்த இலங்கைப் பிரஜைகளே,

**கடந்த 18 வருடங்களாக நம் நாட்டின் உள்நாட்டு யுத்தத்தையிட்டு நாம் அக்கறை கொள்ளவில்லை. இந்த யுத்தத்தால் எம்மக்கள் மீது, விஷேடமாக எம் இளம் சந்ததியினர் மீது ஏற்படக்கூடிய அழிவிற்கிடமான பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பாதிப்புக்களை நீண்டகாலமாக நாம் புறக்கணித்தே வந்துள்ளோம்.**

**அனைத்துப் பகைமை உணர்ச்சிகளையும் ஒரு முடிவிற்குக் கொண்டு வர வேண்டும் என நாம் வேண்டுகிறோம். எம் நாட்டின் தலைவர்கள் அனைவரும் தமது சொந்தத் திட்டங்களை ஒரு புறத்தே வைத்துவிட்டு இலங்கை என்ற உணர்விற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுகிறோம்.**

**சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பித்து பேச்சுவார்த்தை மூலம் யுத்தத்திற்கு ஒரு நிரந்தர முடிவைக் காண வேண்டும் என நாம் வேண்டுகிறோம். அவ்வாறாயின் அனைத்து இலங்கையரும் சிறந்த மகிழ்ச்சிகரமான ஒரு எதிர்காலத்தை அனுபவிக்கலாம்.**

**இலங்கையினதும் அதன் அனைத்து மக்களினதும் நன்மை கருதி இவ்வறிக்கையைப் பின்வருவோர் கூட்டாக விடுத்துள்ளனர்**

பியகம ஏற்றுமதி வலய உற்பத்தியாளர் ஒன்றியம், இலங்கை கப்பல் முகவர்கள் ஒன்றியம், இலங்கை வர்த்தக சம்மேளனம், இலங்கை சரக்கு அனுப்புவோர் ஒன்றியம், கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் ஒன்றியம், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை IATA முகவர்கள் ஒன்றியம், இலங்கை கைத்தொழிலாளர்கள் ஒன்றியம், இலங்கை அப்பரல் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஏற்பாட்டாளர்கள் ஒன்றியம், இலங்கை ஆடை வாங்கும் அலுவலர்கள் ஒன்றியம், இலங்கை ஏற்றுமதியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஹோட்டல்கள் ஒன்றியம், இலங்கை பிரயாண முகவர்கள் ஒன்றியம்.

**ஸ்ரீலங்கா First**

இன்றே செய்வோம் அன்றேல் என்றும் இல்லை

SriLanka First என்பது முக்கிய தனியார் வர்த்தகத் நிறுவனங்களின் அரசியல் சார்பற்ற ஓர் அமைதிக் குழு



# உண்மை நிலை :

## 1982 ல் பாதுகாப்பிற்கான நேரடி மொத்தச் செலவு ரூ. 486 மில்லியன்.

## 2000 ல் அச்செலவு ரூ. 65.4 பில்லியன்.

பேச்சுவார்த்தை மூலமான அமைதி நாட்டை அழிக்கப் பல பில்லியன்களைச் செலவிடாது நாட்டைக் கட்டியெழுப்ப அவற்றைச் செலவிட எமக்குதவும்.

## செப்டம்பர் 19ல் கைகோர்த்து ஒன்றிணைவோம்.


ஸ்ரீலங்கா First

இன்றே செய்வோம் அன்றேல் என்றும் இல்லை

Sri lanka First என்பது முக்கிய தனியார் வர்த்தகத் நிறுவனங்களின் அரசியல் சார்பற்ற ஓர் அமைதிக் குழு: இலங்கை வர்த்தக சம்மேளனம், பியகம ஏற்றுமதி வலய உற்பத்தியாளர் ஒன்றியம், இலங்கை சரக்கு அனுப்புவோர் ஒன்றியம், கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் ஒன்றியம், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை IATA முகவர்கள் ஒன்றியம், இலங்கை கைத்தொழிலாளர்கள் ஒன்றியம், இலங்கை அப்பரல் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஏற்பாட்டாளர்கள் ஒன்றியம், இலங்கை ஆடை வாங்கும் அலுவலர்கள் ஒன்றியம், இலங்கை ஏற்றுமதியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஹோட்டல்கள் ஒன்றியம், இலங்கை பிரயாண முகவர்கள் ஒன்றியம்.

புள்ளி விபரம் : மத்திய வங்கி, தேசிய சமாதானப் பேரவை, மார்க்கா நிறுவனம்.

இதனை வெட்டித் தொங்கவிடவும் / போட்டோ பிரதிகளை எடுத்து விநியோகிக்கவும்.



# உண்மை நிலை :

## உத்தியோகபூர்வத் தகவலின்படி யுத்தத்தால் 62,000 இலங்கையர்கள் இறந்துள்ளனர். 800,000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

அநாவசியமான உயிரிழப்புக்களை நிறுத்த எமது அனைத்து அரசியல் தலைவர்களுக்குமுள்ள ஒரே வழி பேச்சுவார்த்தை மூலம் நிரந்தர அமைதியை நிலை நிறுத்துவதே

## செப்டம்பர் 19ல் கைகோர்த்து ஒன்றிணைவோம்.

**ஸ்ரீலங்கா First**

இன்றே செய்வோம் அன்றேல் என்றும் இல்லை

Sri lanka First என்பது முக்கிய தனியார் வர்த்தகத் நிறுவனங்களின் அரசியல் சார்பற்ற ஓர் அமைதிக் குழு: இலங்கை வர்த்தக சம்மேளனம், பியகம ஏற்றுமதி வலய உற்பத்தியாளர் ஒன்றியம், இலங்கை கப்பல் முகவர்கள் ஒன்றியம், இலங்கை சரக்கு அனுப்புவோர் ஒன்றியம், கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் ஒன்றியம், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை IATA முகவர்கள் ஒன்றியம், இலங்கை கைத்தொழிலாளர்கள் ஒன்றியம், இலங்கை அப்பரல் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஏற்பாட்டாளர்கள் ஒன்றியம், இலங்கை ஆடை வாங்கும் அலுவலர்கள் ஒன்றியம், இலங்கை ஏற்றுமதியாளர்கள் ஒன்றியம், இலங்கை உல்லாசப் பயண ஹோட்டல்கள் ஒன்றியம், இலங்கை பிரயாண முகவர்கள் ஒன்றியம்.

புள்ளி விபரம் : மத்திய வங்கி, தேசிய சமாதான பேரவை, மார்க்கா நிறுவனம்.

(C/18282)

இதனை வெட்டித் தொங்கவிடவும் / போட்டோ பிரதிகளை எடுத்து விநியோகிக்கவும்.

உ

அகில இலங்கை இந்து மாமன்றம்

இணையத்தளம்

http://www.hindu congress.org

இந்து மாமன்றத்தின் இணையத்தளம் ஊடாக மாமன்றச் செய்திகளையும், "இந்து ஒளி" சஞ்சிகையில் வெளிவரும் ஆக்கங்களையும் பார்த்துப் பயனடையுங்கள்.

(C/18268)

மில்லேனியம் கணனிப் பயிற்சி நிலையம்

ஸ்ரீவித்யா கணனி அச்சகம்

பிரத்தியேக செயல்முறை வகுப்புக்களில் கணனி கற்கவும், சகல அச்சுவேலைகளுக்கும் வாழ்த்துப்பாக்கள், ஊஞ்சற்பாடல் முதலியன இயற்றி அச்சிட்டுப் பெறவும் உடனே தொடர்பு கொள்ளலாம்.

ப.சிவானந்தசர்மா B.A. (Hons)

(கோப்பாய் – சிவம்)

கந்தசாமி கோயில் தெற்கு வீதி, இணுவில்.

(92307)

## பகிரங்க அறிவித்தல்

**நீதிவான் நீதிமன்றம் சாவகச்சேரி.**

**வழக்கு இல. 90**

மேற்படி வழக்கில் விளக்கம் முடிவடைந்துள்ளது. இவ் வழக்குடன் சம்பந்தப்பட்ட பின்வரும் சான்றுப் பொருள்கள்

(1) மூன்று பெட்டிகளில் 90 அரச சீல் சாராயப் போத்தல்கள்.

(2) ஒரு பெட்டியில் 24 லயன்லாகர் பியர் போத்தல்கள்

இம்மன்றில் உள்ளன.

மேற்படி சான்றுப் பொருள்களை எவரும் இதுவரை உரிமை கோராததாலும் உரிமையாளரைக் கண்டறிய முடியாதுள்ளதாலும் இச்சான்றுப் பொருள்கள் மன்றில் தடுத்து பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளன.

எனவே இச்சான்றுப் பொருள்களுக்கு உரிமை கோரக்கூடிய எவரேனும் ஆள் இருப்பின் இப்பகிரங்க அறிவித்தல் கொடுக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு(06) மாதங்களுக்குள்ளாக சாவகச்சேரி நீதி வான் நீதிமன்றின் முன் அவரது உரிமைக் கோரிக்கையை முன் வைக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

மன்றின் கட்டளைப்படி,

வீ.வே.கணேசமூர்த்தி,

*பதில் பதி வாளர், நீதிவான் நீதிமன்று,*

*சாவகச்சேரி.*

16-09-2001 (92312)

# 7 மாதங்கள் மறியலில் இருந்த யாழ்.யுவதி விடுதலையானார்

கொழும்பு, செப்.16

கனடா நாட்டுக்குரிய கடவுச்சீட்டில தனது புகைப்படத்தை ஒட்டி அதன் மூலம் நாட்டை விட்டு வெளியேற முயற்சித்தார் எனத் தெரிவித்து கடந்த ஏழு மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த யாழ்யுவதி ஒருவா விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பிரிந்திகா சாம்பசிவம் என்பவரே இவ்வாறு நீர்கொழும்பு நீதிவானால் விடுதலை செய்யப்பட்டவராவார்.

குடிவரவு, குடியகல்வுச் சட்ட விதி களின் கீழ் இந்த யுவதி மீது குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு நீர்கொழும்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத் துக் கொள்ளப்பட்டது. சந்தேகநபர் மீதான குற்றச்சாட்டுப் பத்திரத்தைத் தாக்கல் செய்வதற்கு குடிவரவு, குடிய கல்வுக் கட்டுப்பாட்டாளரால் வழங்கப் பட்டிருந்த அனுமதிச் சான்றிதழில் காணப்பட்ட முரண்பாடுகளை அவரது சார்பில் ஆஜரான சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா சுட்டிக்காட்டி சில சட்டப்பிரச சினைகளை முன்வைத்து வாதாடினார்.

அத்துடன் வழக்குப் பதிவேட்டில் கோவையிடப்பட்டிருந்த கட்டுப்பாட் டாளரின் முதலாவது சான்றிதழுக்கும், பின்னர் தாக்கல் செய்யப்பட்ட இரண டாவது சான்றிதழுக்கும் இடையில் சந்தேகநபரின் பெயரில் வேறுபாடுகள் இருப்பதைச் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா சுட்டிக் காட்டினார்.

இந்த இரண்டு சான்றிதழ்களிலும் வழக்கின் ஆரம்பத்தில் இடப்பட்ட ஒரே திகதி காணப்பட்டது. ஆனால் முத லாவது சான்றிதழில் சந்தேக நபரின் பெயரில் திருத்தம் செய்யப்பட்டிருந் தது. இவற்றில் மோசடி செய்யப்பட் டுள்ளதை ஒப்புக்கொண்ட அரச தரப்புச் சட்டத்தரணி, வழக்கைத் தொடர்ந்து நடத்த விரும்பவில்லை என நீதிவானிடம் தெரிவித்தார்.

இதையடுத்து சந்தேகநபரான இந்த யுவதியை நீதிவான் விடுதலை செய்தார். சந்தேகநபரின் சார்பில் சட்டத்தரணிகள் விராஜ் ஜெயசிங்க, ஜெயதேவி இராயப்பு ஆகியோரின் அனுசரணையுடன் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா ஆஜரானார். (ஜ-7)

## கடைகளில் பரிசோதனை

சண்டிலிப்பாய்,செப்.16

பண்டத்தரிப்பு சந்தைப் பகுதியி லுள்ள கடைகளில் திடீர்ப்பரிசோதனை மேற்கொண்ட பொதுச் சுகாதாரப் பரி சோதகர்கள் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த திகதி கலாவதி யான பிஸ்கட் பக்கற்றுக்களைக் கைப்பற்றி அழித்தனர்.

பண்டத்தரிப்பு பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். இராசதுரை, நவாலி பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். பரமேஸ்வரன் ஆகியோர் கடந்த புதன் கிழமையன்று இப்பரிசோதனையை மேற்கொண்டார். (ஜ-135)

## விண்ணப்பிக்கும் இறுதித்தினம்

கோப்பாய் செப்.16

யாழ்.மாவட்டத்தில்- நடைபெற வுள்ள சிறந்த கால்நடை வளர்ப் போருக்கான (பண்ணையாளர்) தெரி வுப் போட்டியில் பங்குபற்றுவோர் இம்மாத இறுதிக்குள் தமது விண் ணப்பங்களைப் பூர்த்தி செய்து அந் தந்தப் பிரிவு கால்நடை வைத்திய பணிமனைகளில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-72)

## வீதி திருத்தப்பணி

கோப்பாய் செப்.16

நீர்வேலி மடத்தடி ஒழுங்கை செப் பனிடப்பட்டு வருகிறது.

இவ்வீதியைத் திருத்தக் கோரி இப்பகுதி மக்கள் நீண்டகாலமாக பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-72)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 12 | 26 |
| - | - |
| 08 | 09 |
| - | - |
| 1926 | 2000 |

**திருமதி நல்லம்மா சோமசுந்தரம்**

ஆண்டு ஒன்று அகன்றது ஆயினும்
நீண்டு செல்லும் பசுமை நினைவுடன்
மீண்டும் நீங்கள் ஆண்டவன் நிழலில்
அமைதி கொள்ளப் பிரார்த்திக்கின்றோம்.

*இல.31/1, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.* (92277)

உங்கள் நினைவில் இருக்கும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மதுபானப் பிரியர்களே! ஓர் இனிக்கும் நற்செய்தி!

மேலும் குறைக்கப்பட்ட மலிவு விலையில், முற்றிலும் நவீனப்படுத்தப்பட்ட இயந்திரத் தொழில் நுட்பத்தில், புதிய தரத்துடன் உருவாகும்,

"திக்கம் பனஞ்சாராயம்"



எங்கும் விற்பனையாகின்றது.

உங்களை உற்சாகப்படுத்துவதற்கு

உற்ற தோழன்.

எப்பொழுதும் உங்களை

வருத்தாத நண்பன்.

பனையின் சுவையை தரத்துடன் வழங்குவது,

புகை மணம் அற்றது,

எப்பொழுதும் ஒரே தரத்தை உடையது,

திக்கம் பனஞ்சாராயம்

மட்டுமே.

| | முழுப்போத்தல் (750 மி.லீ) | அரைப்போத்தல் (375 மி.லீ) | காற்போத்தல் (185 மி.லீ) |
| --- | --- | --- | --- |
| லேபலில் உள்ள விலை | ~~235/-~~ | ~~120/-~~ | ~~70/-~~ |
| புதிய விலை | 215/- | 112.50 | 65/- |

தொடர்புகளுக்கு:

தலைமைக் காரியாலயம்,
யாழ். - பருத்தித்துறை வீதி,
நாவலர் மடம், நெல்லியடி.

திக்கம் வடிசாலை,
அல்வாய் மேற்கு,
அல்வாய்.

(C/18269)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை இராசரத்தினம் ஆச்சாரி

சாவகச்சேரியை நிரந்தர வசிப்பிடமாகவும் உடுவிலை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராசரத்தினம் ஆச்சாரி 13-09-2001 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை—இராசம்மா ஆகியோரின் அருமை மகனும் திருமதிகள் இளையதம்பி, யோகேஸ்வரி, ஐயம்பிள்ளை புவனேஸ்வரி, சந்திரா சிவகுருநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-
இ. யோகேஸ்வரி
சி. சந்திரா
கட்டுக்காணி வீதி,
சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:-
139, அம்பலவாணர் வீதி,
உடுவில்.

(92356)

## திருமதி யோகாம்பிகை நடராஜா

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியைச் சேர்ந்த திருமதி யோகாம்பிகை நடராஜா 14—09—2001 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கு. நடராஜா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், பிரேமகுமார் (H. N. B.), பிரேமராஜா (H. N. B.), பிரேமினி (ஆஸ்திரேலியா), பிரேமரஞ்சன் (லண்டன்), பிரேமேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரேணுகா (H. N. B.), செல்வி, கணேசானந்தன் (ஆஸ்திரேலியா), இந்திரா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், யோ. கோபாலகிருஷ்ணனின் சகோதரியும், பிரசாந்த், பிரவீனா, பிரணவன், கஜன், ஹாஷினி, கணன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (16 - 09 - 2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு 65/312, காக்கைதீவு, மட்டக்குளி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாலை 4.00 மணிக்குத் தகனக் கிரியைக்காக பொரளை கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. பிரேமகுமார்
(மகன்).

65/312, காக்கைதீவு,
மட்டக்குளி.

(92354)

## திருமதி அப்புத்துரை சிவக்கொழுந்து

சரவணை கிழக்கு வேலணையைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்புத்துரை அவர்களின் அன்பு மனைவி சிவக்கொழுந்து அவர்கள் 14-09-2001 அன்று வவுனியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் சிவபாக்கியம், சிவராசா, சிவயோகம், சிவமணி, தர்மராசா, தங்கராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் சண்முகராசா, தங்கராசா, கமலா, மதிவதனி, வசந்தராணி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15-09-01) சனிக்கிழமை வவுனியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. தர்மராசா

சரவணை கிழக்கு,
வேலணை.

(92349)

## திருமதி கருணாகரன் நந்தினிதேவி

(மண்கும்பான்)

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி முரசுமோட்டையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கருணாகரன் நந்தினிதேவி 13-09-2001 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா - சிவக்கொழுந்து தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற மண்கும்பான் கைலாசபிள்ளை — பூரணத்தின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கருணாகரனின் பாசமிகு மனைவியும் செந்தூரிகா, தேனுஜன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலசரஸ்வதி, யசோதா, கமலாம்பிகை, கமலநாதன், விமலாம்பிகை, விமலநாதன், நவநாதன், சிவநேந்திரி, பவனிதரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கணேசையா, கனகசுந்தரம், கனகலிங்கம், கெங்காதேவி, யோகேஸ்வரி, தயாநிதி, கருணாநிதி, கனகநாயகம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கடந்த (13-09-2001) வியாழக்கிழமை முரசுமோட்டை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது நல்லூர் பண்டாரிக்குளம் மேற்கு ஒழுங்கையில் உள்ள 17/32, இலக்க இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
கை. கணேசையா
(மைத்துனர்)

17/32, பண்டாரிக்குளம்
மேற்கு ஒழுங்கை,
நல்லூர்.

(92355)

# காலபோக விதைப்புக் காலம் இது; ஆடு, மாடுகளைக் கட்டி வளருங்கள்

## பயிர்ச்செய்கை பற்றிய கூட்டத்தில் அறிவுறுத்து

சண்டிலிப்பாய், செப். 16

காலபோக நெல் விதைப்பு ஆரம்பமாகவுள்ள இந்தக் காலகட்டத்தில் கட்டாக்காலி ஆடு, மாடுகளை மேயவிடாது கட்டி வளர்க்க வேண்டும் பயிரழிவுக்கு அச்சுறுத்தலாக இருந்துவரும் கட்டாக்காலி ஆடு, மாடுகளைப் பிடிப்பதற்கு விவசாயிகள் சம்மேளனங்கள் தத்தமது பிரிவில் பிடிகாரர்களை நியமிக்க வேண்டியது அவசியம். ஒவ்வொரு விவசாயிகள் சம்மேளனமும் இவ்விடயத்தில் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனம் நடத்திய காலபோக நெற்செய்கை பற்றிய கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தொல்புரம் கமநல சேவை கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி அ. பாலசிங்கம் தெரிவித்தார்.

சம்மேளனத் தலைவர் ச. செல்வரத்தினம் தலைமையில் கடந்த 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற இக்கலந்துரையாடலில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்—

நெல் விதைப்பு செய்த காணிக்குப் பக்கத்தில் வெற்றுக் காணி இருந்தால் அதில் மாடு, ஆடு மேய்ப்பதுக்கு கட்டப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். காணி உழவுக்கு மாடுகளைக் கொண்டு போகும் போது அவற்றின் வாயை மூடிக்கட்டி விட்டுக் கொண்டு போகவேண்டும். வீதி ஓரத்தில் நெற் பயிர்க் காணி இருந்தால் அதிலிருந்து நூறு யார் தூரத்தில் தான் மாடுகளைக் கட்ட வேண்டும். இந்த விதிகளை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைத்து உதவவேண்டும். விவசாயிகள் சம்மேளனங்கள் இவ் விடயத்தில் கவனத்துடனும் பொறுப்புடனும் அதிக அக்கறை கொண்டு செயற்பட்டு இவ்வருட கால போக நெற் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு தேவையான உள்ளீடுகளைப் பெற்றுக் கொடுப்பதும் காலபோக நெற் செய்கையை மேற்கொள்வதற்கு விவசாயிகள் எதிர்நோக்கும் சிரமங்களைத் தீர்த்து வைப்பதற்கு உதவுவதும் அவ்வப்பகுதி விவசாய சம்மேளனங்களின் பொறுப்பாகும்—என்றார்.

கீரிமலை கமநல கேந்திர நிலைய விவசாய போதனாசிரியர் திருமதி பரமேஸ்வரி மணிவர்ணன் உரையாற்றுகையில்—

விவசாயிகள் இரசாயன உரங்களைப் பயிர்களுக்கு அதிகளவில் பயன்படுத்துவதை குறைத்து இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்த வேண்டும். கிருமிநாசினிகளைப்பயன் படுத்தும்போது விவசாயத்திணைக்கள அதிகாரிகளின் ஆலோசனையைப் பெற்ற பின்பு அவற்றைப் பயன்படுத்துவது நல்லது. சில இடங்களில் தவறான முறையில் கிருமிநாசினியைப் பயிர்களுக்குத் தெளித்து வருகின்றார்கள். இதனால் பயிர்களுக்குப்பெரும் பாதிப்பு ஏற்படும். பீடைகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலையும் ஏற்படும். வேப்பம் புண்ணாக்கு, வேப்பம் விதை ஆகியவற்றையும் விவசாயிகள் பீடைகொல்லியாகப் பயன்படுத்த முடியும். இந்தியாவில் — தமிழ் நாட்டில் — இதனை அதிகளவில் பயன்படுத்தி நல்ல பலனை விவசாயிகள் பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது— என்றார்.

யாழ். மிதிவெடி விழிப்புணர்வுத்திட்ட வெளிக்கள உத்தியோகத்தர் செல்வி ச. ஞானலோஜினி மிதிவெடியினால் ஏற்படும் அபாயங்கள் பற்றியும், அவற்றிலிருந்து மக்கள் தங்களைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய விதிமுறைகள் பற்றியும் உரை நிகழ்த்தினார்.

விவசாயிகள் சம்மேளனத்தின் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது.

(ஐ-135)

## பதவி விலக்கப்பட்டோர் மீள நியமனம்

வடமராட்சி, செப். 16

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் நிரந்தர வேலை நீக்கம் செய்யப்பட்ட பொதுமுகாமையாளர் மா. சோமசுந்தரஐயர், வர்த்தக முகாமையாளர் வே. பரமானந்தம் ஆகியோருக்கு மீளவேலை வழங்குமாறு வடக்கு—கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பருத்தித்துறைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

இவ்விரு உத்தியோகத்தர்களும் 21-12-98 இல் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு பின்னர் ஒழுக்காற்று விசாரணை மூலம் நிரந்தர வேலை நீக்கம் செய்யப்பட்டனர். வேலை நீக்கம் குறித்து இரு உத்தியோகத்தர்களும் வடக்கு — கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவுக்கு மேன் முறையீடு செய்திருந்தனர்.

இதனைப் பரிசீலனை செய்த கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு இவர்களது வேலை நீக்கம் பொருத்தமற்றது எனக் கண்டறிந்துள்ளதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஐ-173)

## பண்ணிசைப் போட்டி

வடமராட்சி, செப் 16

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த மஹோற்சவத்தை ஒட்டி பாடசாலை மாணவர்களிடையே பண்ணிசைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

பஞ்சபுராணத்துடன் நாலாயிரத்திவ்வியபிரபந்தத்துடனான இப் போட்டி தரம் 4 தொடக்கம் 13 வரையிலான மாணவர்களிடையே இரு பிரிவுகளாக நடைபெறும்.

போட்டிக்கான முடிவுதினம் எதிர்வரும் 20 ஆம் திகதியாகும். கீழ்ப்பிரிவுப் போட்டிகள் எதிர்வரும் 22ஆம்திகதியும், மேற்பிரிவுப் போட்டிகள் 23 ஆம் திகதியும் நண்பகல் 12 மணிக்கு ஆலயத்தில் நடைபெறும். போட்டிக்கான பரிசளிப்பு அடுத்த மாதம் 7ஆம் திகதி ஆலயத்தில் இடம்பெறும்.

போட்டி பற்றிய விவரங்களை கோயில் கருமபீடத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் —

பாடசாலைஅதிபரின்உறுதியுரையுடன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் எனவும் — அறங்காவலர் சபை கேட்டுள்ளது.

(ஐ-173)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், செப். 16

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் வடமராட்சி விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் திக்கமடை மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி— றேஞ்சர்ஸ் வி. க. எதிர் கலட்டி ஐ வி. க.

★ மாலை 4.30 மணி — ஆதிசக்தி வி. க. எதிர் டயமன்ஸ் வி. க.

(ஐ-7)

## சண்டிலிப்பாயில் மாதாந்த உதவிப் பணம்

நவாலி, செப். 16

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களினதும் மற்றும் காசநோய், தொழுநோய், புற்றுநோய், யானைக்கால் நோய் என்பவற்றிற்கான உதவிப் பணத்தினைப் பெறுபவர்களினதும் செப்ரெம்பர் மாதத்திற்குரியகொடுப்பனவுகள், சண்டிலிப்பாய்ப், பிரதேச செயலகத்தினால் அந்தந்த தபாலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-7-100)

## சமய சந்நிதிகளில்

மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டு 80 ஆண்டுகள் பூர்த்தி அடைவதை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருப்பலி ஒப்புக்கொடுக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து ஆன்ம இயக்குநர் உரை, பிரசீடியங்களின் நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறும். (க-7)

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஆஞ்சநேயர் பொங்கல் உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறும் சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து நடைபெறும்.

பொங்கல் நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஆஞ்சநேயர் வீதியுலா வருவார். காலை 10 மணி தொடக்கம் ஆஞ்சநேயர் பக்தர்களின் பஜனை இடம்பெறும். (க-15)

★ ★ ★

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த மஹோற்சவத்தை ஒட்டி உற்சவ தினங்களில் தென்புலோலி மூச்சம்புலவு தான்தோன்றீஸ்வரர் கோயிலில் அன்னதானம் வழமையான வருடங்களைப் போல இம்முறையும் இடம்பெறும்.

(ஐ-173)

## 5 ஆயிரம் அ. அட்டைகள் வந்தன

யாழ்ப்பாணம், செப். 16

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பம் செய்த சுமார் 5 ஆயிரம் பேரின் அடையாள அட்டைகள் யாழ். செயலகத்தின் ஆள்பதிவுத் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

அவை தரம் பிரிக்கப்பட்டு பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-10)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ், சேவல், இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசன் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச்சந்தையடி, நல்லூர். (92172)

இறைச்சிக்கோழி (BROILERS) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. 1kg - 135/=. தொடர்பு: 157, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (92292)

இறைச்சிக்கோழி (BROILERS), கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம்செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (92002)

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. 1kg 140/=. வியாபாரிகளுக்குக் கழிவு வழங்கப்படும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.3529,2867. (92174)

இறைச்சிக்கோழி, விறாத்துக்குஞ்சு மொத்தமாகவும் சில்லறையாகவும் வேண்டிய நிறையில் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். சங்கீத், 40, விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு; 55, ஆடியபாதம் வீதி, கல்வியங்காட்டு சந்தைக்கு அருகில். (92300)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் (பாதிக்கோழி உட்பட) விற்பனைக்கு உண்டு. 1kg 150/-. சுத்தம் செய்யப்பட்டது 220/-. தொடர்பு: இல.227, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (நரிக்குண்டுக்கு அருகில்) (92175)

இன்று நேற்று அல்ல என்றுமே அதிகுறைந்த விலையில் புறொயிலர் இறைச்சிக்கோழி எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தற்போதைய விலை: 1Kg 120/=. சுத்தம் செய்த இறைச்சி 1Kg 175/=. தொடர்பு: மாஸ்ரர், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.(92348)

## வெளிவந்து விட்டது

ஆசிரியர் S.அன்ரனின் விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும் புதிய G.C.E O/L) 2001 முதல் (பாகம் 2)-2001 முன்னோடி வினாவிடைகளுடன் கூடிய பரீட்சை வழிகாட்டல் குறிப்புகளையும் கொண்ட நூல். (92339)

## தவறிவிட்டது

3ஆம் வட்டாரம், புங்குடுதீவைச் சேர்ந்த சீவரத்தினம் குகதாஸ் என்பவருடைய விசேட அ.அட்டை (இல. 091204941) யாழ்.ஆஸ்பத்திரி வீதிக்கும் சத்திரத்துச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பாலவிநாயகர் ரேடர்ஸ், 314, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும்.(92314)

வேலும்மயிலும் விஜயராணி என்பவருடைய தே.அ.அ (இல.675141711V), வி.அ.அ. (இல.0902027498) என்பன கந்தர்மடம் செல்வநாகபூசணி அம்பாள் கோயிலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 18, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (92315)

சிவஞானம் ஞானகுமாரன் என்பவரது தேசிய அ.அ. (இல. 680441154V), விசேட அ.அட்டையும், வேலைக்கான ஆள் அ. அட்டையும் யாழ்ப்பாணத்தில் தவற விடப்பட்டுவிட்டன. கண்டெடுத்தவர்கள் சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (92342)

## ஆங்கில வகுப்புகள்

A/L மாணவர்களுக்கும், A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்குமான ஆங்கில வகுப்புகள், புதன்கிழமை (19.09.2001) ஆரம்பம். தொடர்பு: நாகேந்திரம் (ஆசிரியர்), இல.34/4, செட்டித் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (92261)

## விற்பனைக்கு

யமகா 2800 ஜெனரேட்டர் விற்பனைக்கு உண்டு. அ.செல்வம், இல. 171, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (மககள் வங்கிக்கு அருகில்) என்னும் முகவரியில் தொடர்புகொள்ளவும். (92299)

நல்ல நிலையிலுள்ள 6016 NP கனோன் (CANON) போட்டோ பிரதி இயந்திரம் ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: வே.நடராசா, 22, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (கிழமை நாள்களில் பார்வையிடலாம்) T.P 2461 (92345)

## வீடு விற்பனைக்கு

வண்ணார்பண்ணை, கோபால் ஒழுங்கையில் அமைந்த சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: விள.இல. 1365, மே/பா. உதயன். (92337)

## குருவிகள் விற்பனைக்கு

அழகான வெள்ளை, மஞ்சள் Love birds குருவிகள் உட்பட எல்லா நிறக் குருவிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A.டானியல், வன்னியசிங்கம் வீதி, (மேல்மாடி வீடு முன்பாக - G.S. அலுவலக முன்பாக) இணுவில். (92338)

## விற்பனைக்கு

**4 இஞ்சி புதிய கொங்கிறீற் கற்கள்**

நல்ல தரமானதும் உத்தரவாதத்துடனும் விற்பனைக்கு உண்டு.

விலை ரூபா 16/- மட்டுமே

தொடர்புகளுக்கு:

**பூங்கனிச்சோலை**

திருநெல்வேலி கிழக்கு.

T.P No: 2976

## கல்விச் சுற்றுலா வருவோர் கவனத்துக்கு!

எமது பூங்கனிச்சோலையைப் பார்வையிட கல்விச் சுற்றுலா வருவோர் மற்றும் குழுக்களாக வருவோர் மட்டும் பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பிற்பகல் 2.30 மணிக்குப் பின் வருபவர்களுக்கு எக்காரணம் கொண்டும் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றோம்.

- நிர்வாகி,
பூங்கனிச்சோலை,
*முடமாவடி,*
*திருநெல்வேலி.*

(C/18285)

உ

# காரைநகர் புகலி
## ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்
# மண்டலாபிஷேக விழா விஞ்ஞாபனம்

அடியார்களே!

நாளை (17.09.2001) திங்கட்கிழமை காலை 7 மணிக்கு விநாயகர், ஷண்முகர், கதிர்வேலாயுத சிவசுப்பிரமணிய சுவாமி ஆகிய மூர்த்திகளுக்கு நவோத்தர சத சங்காபிஷேகமும் வைரவப் பெருமானுக்கு ஸ்நபனாபிஷேகமும் நடைபெற்று பின்பு எம்பெருமானுக்கு ஷண்முகார்ச்சனை நடைபெற்று ஸ்ரீ ஷண்முகப் பெருமான் திருவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறத் திருவருள்பாலித்துள்ளது.



**இரவு விசேட நிகழ்ச்சிகள்**

* விசேட மேளக் கச்சேரி

* கதாப்பிரசங்கம்: 'வள்ளி திருமணம்'
*நிகழ்த்துபவர்:* **திரு.நடேசன் சிவசண்முகமூர்த்தி** (தொல்புரம்)

* நாடகம்: காரைநகர் திருநாவுக்கரசு நாடக சபா மன்றம் அளிக்கும்
**'அரிச்சந்திர மயான காண்டம்'**
(இந்நாடகத்தில் படப்பிடிப்பாளர் திரு அவர்கள் அரிச்சந்திரனாகப் பாத்திரமேற்றுத் தோன்றுவார்.)

*ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமான் மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பெற்ற பூந்தண்டிகையில் விநாயகர் தண்டாயுதபாணி சகிதமாகத் திருவீதியுலா வருங் காட்சியும் நடைபெறும்.*

அடியார்கள் அன்புடன் வந்து பெருமானைத் தரிசித்துய்வீர்களாக! - விழா உபயகாரர்.

உங்கள் தேவைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்:

**படப்பிடிப்பாளர் திரு** சத்தியக்காடு, சுழிபுரம். (92350)

## தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு
### (ஓர் அன்பான வேண்டுகோள்)



தமிழ் பேசும் மக்களின் தேசியத் தலைவனாக, தந்தையாக, தேசத்தின் வழிகாட்டியாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் தந்தை செல்வா ஆவார். தந்தை அவர்கள் மறைந்து இருபத்தைந்து ஆண்டுகளின நிறைவை முன்னிட்டு அவரின் நினைவாக அடுத்த வருடம் (26.04.2002) பின்வரும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல அறங்காவற்குழு தீர்மானித்துள்ளது." அவையாவன;

1. **தந்தையின் வரலாறு தமிழ்த் தேசியத்துடன் பின்னிப் பிணைந்து நிற்பதால் அவரது நாடாளுமன்ற உரைகள், மாநாட்டுத் தலைமை உரைகள், அவர் பற்றிய பத்திரிகைச் செய்திகள், புகைப்படங்கள் ஆகியவற்றைத் தொகுத்து ஒரு வரலாற்று ஆவணமாக வெளியிடுதல்.**
2. தந்தை பற்றிய குறுந் திரைப்படம் வெளியிடுதல்.
3. வருடாவருடம் நினைவுப் பேருரைகளை நடத்துதல்.
4. நினைவுத் தூபியை அழகுபடுத்திப் பாதுகாத்தல்.

இவற்றோடு மேலும் பல வேலைத்திட்டங்களைத் தொடரவும் திட்டமிட்டுள்ளோம்.

இத்திட்டங்களை நிறைவேற்ற அனைத்துத் தமிழ் பேசும் மக்களிடமிருந்தும் பேராதரவை வேண்டி நிற்கின்றோம். மேற்குறிப்பிட்ட வரலாற்று நூலுக்கு உதவும் வகையில் தந்தை பற்றிய ஆவணங்கள், வெளியீடுகள், பத்திரிகைக் குறிப்புகள், புகைப்படங்கள் போன்றவற்றை எமக்கு அனுப்பி உதவுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தொடர்பு முகவரி:
**செயலாளர்,**
***தந்தை செல்வா அறங்காவற்குழு,***
*35, நெல்லியடி ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (யாழ்ப்பாணம்)

மேதகு ஆயர்
**சு.ஜெபநேசன்**
தலைவர்.

பேராசிரியர்
***சி.க.சிற்றம்பலம்***
செயலாளர்.

(92322)



உ

ஸ்ரீ ராமஜெயம்





# வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

# வருடாந்த மஹோற்சவம்

| | | |
|---|---|---|
| கொடியேற்றவிழா | 18-09-2001 | செவ்வாய்க்கிழமை |
| ஸ்ரீசயனச்சேவை | 19-09-2001 | புதன்கிழமை |
| வெண்ணைத்தாழிச்சேவை | 24-09-2001 | திங்கட்கிழமை |
| சித்திரத்தேர் விழா | 26-09-2001 | புதன்கிழமை |
| தீர்த்தோற்சவம் | 27-09-2001 | வியாழக்கிழமை |
| திருக்கல்யாண உற்சவம் | 28-09-2001 | வெள்ளிக்கிழமை |
| ஆஞ்சநேயர் பொங்கல் | 02-10-2001 | செவ்வாய்க்கிழமை |

புரட்டாதிச் சனிவார உற்சவங்களும் நவக்கிரக தோச அர்ச்சனைகளும் நடைபெறும்.

- *ஆதீன மகா சபை.*

விளம்பர அனுசரணை:

# பட்டாபி படமாடம்

64, மணிக்கூட்டு வீதி, (92343) யாழ்ப்பாணம்.

## புதியதோர் சேவை

உங்கள் கடிதங்களை உடனுக்குடன் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கு தொடர்பு கொள்ளுங்கள்.

*SRI MURUGAN*

*Computer Systems & Agency Post Office*

*303, K.K.S. Road, Jaffna.*

T.P.: 021-2670
FAX: 021-3214

e.mail: del-smskr@eureka.lk
smurugan@slt net.lk

(C/18290)


## கலைப்பீட புகுமுக மாணவர்களுக்கான அறிமுகநிகழ்வு

புகுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு நாளை 17.09.2001 முதல் 29.09.2001 வரை நடைபெறவுள்ளதால் சிரேஷ்ட மாணவர்கள் தங்கள் வருடப் பிரதிநிதிகளிடம் இது சம்பந்தமான தகவலைப் பெற்று இந்நிகழ்வுக்குப் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர்,
கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(92341)


## Baraka

ஆரோக்கிய வாழ்வின் உற்ற நண்பன்

# பராகா

கருஞ்சீரக எண்ணெய்
கருஞ்சீரக குளிசை



நாடு முழுவதிலும் உள்ள எல்லா பார்மசிகளிலும் கிடைக்கிறது.

ஆயுள்வேத திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றது.

நீங்கள் நீரிழிவு நோயால் அவதிப்படுபவரா?
அல்லது உடம்பில் அதிக கொலஸ்ரோல் இருப்பதால் கவலைப்படுகிறீர்களா?
கவலை வேண்டாம்....
பராகாவைப் பாவித்துப் பயனடையுங்கள்.

EXPOLANKA COMMODITIES (PVT) LTD.

*No.11A, Mile Post Avenue, Colombo - 3, SriLanka.*

Distributor in Jaffna,
SIVA NARUMANAB POONGA
No: 288, Hospital Road,
Jaffna. Tel: 021 - 2567

*Fax : 676546*
*E-Mail : expocom@sri.lanka.net*
*Web site : www.barakaoil.com*

(C/18286)


## 5 ஆம் ஆண்டின் நீங்காத நினைவலைகள்

மலர்வு 01 - 10 - 1939



உதிர்வு 16 - 09 - 1996

### அமரர் பூ.இரத்தினம்

(ஓய்வுபெற்ற ஊழியர் - காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

நீர் நிறைந்த விழிகளிலே உன்
எழிலுருவம் தேடுகின்றோம்!
ஏக்கமதை எடுத்துச் சொல்ல
வார்த்தைகள் ஏதுமில்லை!

*தபாற்கந்தோர் அருகில்,*
*தெல்லிப்பழை.*
*மெமோறியல் ஒழுங்கை,*
*மானிப்பாய்.*

உங்கள் நினைவில்,
குடும்பத்தினர்.

(92366)

## விவசாய பீடம்
### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்ச்சி
2001/2002

விவசாயபீடத்தின் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்ச்சி 01.10.2001 திங்கட்கிழமை காலை 8 மணிக்கு விவசாய பீடத்தில் ஆரம்பமாகும். விவசாய பீடத்திற்கு பதிவுகளை மேற்கொண்ட அனைத்து மாணவர்களும் இந்நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்காக காலை 8 மணிக்கு விவசாய பீடத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து புதிய மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டுக்கான விரிவுரைகள் 04.10.2001 வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

(C/18292) - பதிவாளர்.


ரசிகப்பெருமக்களே!
மீண்டும் காட்சிகள் ஆரம்பம்!!

## பிரபா திரையரங்கு
- உடுப்பிட்டி -

அநேகரின் ஆவலைப் பூர்த்திசெய்யும் விதத்தில்
ரஜனி, மீனா, ரோஜா
மற்றும் பலர் நடிப்பில்

# வீரா

காட்சிகள்: 10.30, 2.30

(92344)

## ராஜா யாழ்ப்பாணம்

அர்ஜுன், சோனாலி
மற்றும் பலர் நடிப்பில்

# கண்ணோடு காண்பதெல்லாம்

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2, 5 (புதிய நேரம்)

(C/18274)

## நாகம்ஸ் சுன்னாகம்

ரஜனி, குஷ்பூ, விஜயசாந்தி
நடிப்பில்

# மன்னன்

(ரீல்ஸ்)

காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)

(92353)

## லஷ்சுமி இணுவில்

விஜய், தேவயானி
நடித்த

# ப்ரெண்ட்ஸ்

(ரீல்ஸ்) STR பிலிம்ஸ்

காட்சிகள்:- 11.00, 2.30 (பழையநேரம்)

(92364)


## 2 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 13 - 06 - 1956



மறைவு 30 - 08 - 1999

### அமரர் கணபதிப்பிள்ளை செல்வரத்தினம்

(ஜேர்மனி)

திதி: 16.09.2001

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
நீர் எம் மீது காட்டிய பாசமும் நேசமும்
என்றுமே மறையாது என்றும் எம்மோடு
உமது நினைவலைகள் ஜீவிக்கும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
சு.கணபதிப்பிள்ளை
(தந்தை),
*கைதடி தெற்கு,*
*கைதடி.*

மனைவி, பிள்ளை (ஜேர்மனி)
தாய், தந்தை,
சகோதர சகோதரிகள்,
மாமன், மச்சான்,
பெறாமக்கள், மருமக்கள்.

(92358)

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் இறுதியாண்டு மருத்துவபீட மாணவன்
சோ. நித்தியானந்தாவின் தாயார்

### திருமதி கோகிலம் சோமசுந்தரம்

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் தெரிவிப்பதோடு அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மருத்துவபீட மாணவர்கள்
17ஆம் அணி.

(92365)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கோகிலம் சோமசுந்தரம்

கற்கோவளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கோகிலம் சோமசுந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) நேற்று (15.09.2001) சனிக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் ந.சோமசுந்தரம் (ஓய்வுபெற்ற நகராட்சி மன்றச் செயலாளர், பருத்தித்துறை) அவர்களின் அன்பு மனைவியும், சோ.நித்தியானந்தா (இறுதி வருடம், யாழ். மருத்துவபீடம்), திருமதி சி. சுஜந்தினி (லண்டன்), செல்வி சோ.நிலானி (மாணவி, திருக்குடும்ப கன்னியர்மடம்) ஆகியோரின் பாசம் மிக்க தாயாரும், இ.சிறீதரனின் (லண்டன், இரசாயன விரிவுரையாளர்) அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*'சுஜா பவனம்',*
*கற்கோவளம்,*
*பருத்தித்துறை.*

தகவல்:
ந.சோமசுந்தரம்
(ஓய்வுபெற்ற செயலாளர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை)

(92362)

## கதிரன் செல்லத்துரை

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரன் செல்லத்துரை 14.09.2001 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் கிரோகினியின் அன்புக் கணவரும், கணபதிப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், மகாத்மராஜா, பத்மினி, கமலினி (வவுனியா),மாலினி, அன்பினி (பொறியியலாளர், கண்டி) தர்மராஜா ஆகியோரின் மைத்துனரும் தர்சிகா, ஷகானா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2001) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

*கடுக்காயடி லேன்,*
*நாயன்மார்கட்டு.*

தகவல்:-
க.மகாத்மராஜா,
க.தர்மராஜா
(மைத்துனர்கள்)

(92363)

## தம்பிமுத்து குணசிங்கம்
### (கொலன்ட்)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து குணசிங்கம் 14.09.2001 வெள்ளிக்கிழமை கொலன்டில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து பூமணியின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெகானந்தன், அனுஷா, சபிதா, பவித்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஆ.சுப்பிரமணியம் மற்றும் பரிமளத்தின் அன்பு மருமகனும் சரோஜினி, அன்னலஷ்சுமி, இராசலிங்கம், ரகுநாதன், ஜெயலக்ஷ்மி, சிறிதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கொலன்டில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'செங்கமல வாசா',*
*கே.கே.எஸ். வீதி,*
*கொக்குவில்.*

தகவல்:
நா.கணேஸ்
(மைத்துனர்)

(C/18294)

## திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆவணித் திங்கள் 31 ஆம் நாள் இன்று (16–09–2001) ஞாயிற்றுக்கிழமை மாலை சதுர்த்தசி திதியும் மக நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்தம் 7.30 மணி முதல் 9.00 மணி வரையும் உள்ள கன்னிலக்கினத்தில்

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
### அருணாகரன்



எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
### பிரதீபா

ஆகிய இருவருக்கும் சிங்கப்பூர் ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு இறைவன் திருவருளால் திருமணம் நடைபெறுகின்றது என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

திருமதி இ.குமாரவேலு,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

Blk 552, Jurong west st.42,
# 04 - 327, Singapore,
Tel:- 65 - 90234930

இரு வீட்டார் அழைப்பு

திரு.திருமதி துரைராசா,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

Blk 501, Bt Batok st.52,
# 04 - 51, Singapore,
Tel:- 65 - 90615731

(92340)

# யாழ்.குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆபத்து அதிகளவில் இருப்பது குறித்து மருத்துவ அதிகாரிகள் தன்னுடன் கலந்துரையாடியதாக றொபோரோவா குறிப்பிட்டார்.

"அகதி முகாம்களின் நிலைமை, பொதுவான வாழ்க்கைச்சூழல், பெண்களின் தலைமையை நம்பியிருக்கும் குடும்பங்கள் அதிகம் உள்ளமை போன்ற விடயங்கள் கவலையளிப்பனவாக இருக்கின்றன" - என்றார் அவர்.

பதின்ம வயதில் (ரீன் ஏஜ்) அதிகமானோர் கர்ப்பிணியாதல், பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள், அகதி முகாம்களில் விபச்சாரம் ஆகியவை குறித்தும் உலக வங்கித் தூதுக்குழு கவலை வெளியிட்டுள்ளது.

நாட்டில் 'எய்ட்ஸ்' ஆபத்துக் குறித்து உலக வங்கி இந்த வருடத்தில் விடுத்துள்ள இரண்டாவது எச்சரிக்கை இது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது உரிய நடவடிக்கை விரைந்து எடுக்கப்படாவிட்டால் அடுத்த பத்தாண்டுகளில் எய்ட்ஸ் தொற்றுக்கு ஆளான 2 லட்சத்து 70 ஆயிரம் பேரை இலங்கை கொண்டிருக்கும் என்று கடந்த ஜுலையில் உலக வங்கியின் பொதுச் சுகாதார நிபுண்ர் சலீம் ஹபயப் எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆயுதப் படையினரும் இடம் பெயர்ந்தோருமே இந்த நோய்த் தாக்கத்துக்கு அதிகம் ஆளாகும் ஆபத்துள்ளவர்கள் என்று அவர் அடையாளம் கண்டிருந்தார்.

குடாநாட்டில் காச நோய் மற்றும் குடல் நோய்களின் தாக்கம் அதிகரித்து வரும் அதேசமயம் மலேரியாப் பாதிப்புக் குறைந்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

குடாநாட்டின் அபிவிருத்தி வேலைகள் கையாளப்படும் விதம் தொடர்பாக அரசைக் கடுமையாக விமர்சித்த றொபோரோவா குடாநாட்டில் 440 சமுர்த்தி ஊழியர்கள் உள்ள போதிலும் அங்கு தான் மேற்கொண்ட பத்துநாள் விஜயத்தில் சமுர்த்தி பயனாளிகள் ஒருவரைக் கூடக் காணவில்லை என்று சொன்னார்.

குடாநாட்டில் மாதச் சம்பளம் 3 ஆயிரம் ரூபா என்ற வீதத்தில் ஆயிரத்து ஐந்நூறு அபிவிருத்தித் தொண்டர்களை அரசு பணிக்கு அமர்த்தியுள்ளபோதும் அவர்கள் செய்யும் அபிவிருத்தி வேலைகள் என்னவென்பதைத் தன்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)


## புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

எமது நிறுவனத்தினால் நடத்தப்பட்ட 2001/2002 புலமைப்பரிசில் திட்டத்தில் தோற்றி September மாத கற்கைநெறிகளுக்கு பதிவு செய்த மாணவர்களுக்கான புதிய வகுப்புக்கள் 22-09-2001 அன்று காலை 9.30மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:-
★
புலமைப்பரிசிலில் தோற்றி இதுவரை பதிவு செய்யாத மாணவர்கள் எமது அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம்.

DCS
COLLEGE OF COMPUTER TECHNOLOGY.
124/2, Palaly Road,
Thirunelvely,
Jaffna.
(C/18295)
N.M.M.V.Road,
Nelliyadi.



## இடம்மாற்றம்

"ரட்ணாஸ் வைண்டிங்" என்னும் ஸ்தாபனத்தில்
ரட்ணாஸ் மோட்டோர்ஸ் என
இந்நைநாள் வரை 219, ஸ்ரான்லி வீதியில்
இயங்கி வந்த
எமது ஸ்தாபனமானது,
நேற்று (15.09.2001) சனிக்கிழமை முதல்
185, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில்

"ரஜீவன் மோட்டோர்ஸ்"

என்ற பெயரில் இயங்குகின்றது என்பதனை எமது இனிய நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

ரட்ணாஸ் வைண்டிங் ஸ்தாபனம் அதே
219, ஸ்ரான்லி வீதியிலேயே இயங்கும்.
(92303) - ரட்ணாஸ்.


## முகாம்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மட்டக்களப்பு மக்கள் பலர் தமது பிள்ளைகளையும் உறவினர்களையும் தாமாகவே போராட்டத்தில் இணைத்து வருகின்றனர்.

விஷமத்தனமான பொய்ப்பிரசாரங்களைத் துண்டுப் பிரசுரமாக வெளியிடும் இராணுவத்தினரும், அவர்களுக்குத் துணைநிற்கும் சில தேசத்துரோகிகளும் இந்தத் தாக்குதலை முறியடிக்கவேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கிறார்கள்.

வரலாற்றுப் போரில் நீங்களும் இணைந்துகொண்டு எமது தலைவர் வே.பிரபாகரனின் காலத்தில் பிறந்து அவரது காலத்திலேயே சுதந்திரம் பெறுவதற்கு உறுதுணையாக நின்றவர்கள் என்ற பெருமையைப் பெற்றுக்கொள்வதற்கு உங்களைத் தயார்படுத்துங்கள்.

கடந்தமாதம் 21ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு மத்திய முகாமையும் அதற்கு பாதுகாப்பு வழங்கிய இரண்டு மினி முகாம்களையும் எமது போராளிகள் தாக்கி அழித்தனர்.

இதே போன்றதொரு பாரிய வெற்றித்தாக்குதலுக்கு எமது சகல படையணிகளும் தயாராகிவிட்டன.

இதனால் மக்கள் அனைவரும் இந்தத் தாக்குதலுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராவதுடன் இராணுவ நிலைகளுக்கு அப்பால் விலகியிருக்குமாறும் கேட்கப்படுகின்றனர்.

- இவ்வாறு அந்தத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## அமெரிக்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உதவியுடன் எங்களது விடுதலைப் போராட்டத்தின் நற்பெயரைக் கெடுக்கவும், யாழ்.மக்களை குழப்பவும் அரசு முயல்கின்றது.

"அமெரிக்க மக்கள் எதிர்கொண்டுள்ள எல்லை மீறிய இந்த மனிதப் பேரழிவின் தாக்கத்தை ஸ்ரீலங்கா அரசும் அதன் கூட்டாளியான - புலிகளுக்கு எதிரான - ஈபிடிபியும் இணைந்து தங்களது அரசியல் இலாபத்துக்குப் பயன்படுத்த முனைவது கவலைக்குரியதாகும்.

"இந்தப் பேரழிவில் உயிரிழந்த ஆயிரக்கணக்கான அப்பாவிகளின் குடும்பத்தவர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களின் துன்பத்தையும் துயரத்தையும் நாமும் பகிர்ந்து கொள்கின்றோம். மனிதப் பேரவலத்தை ஏற்படுத்திய இந்தக் கொடூரக் குற்றத்தை நாம் கண்டிக்கிறோம்."

-இப்படி உதயனுக்குத் தெரிவித்தார் அன்ரன் பாலசிங்கம். (உ)

## யாழ்.மாவட்ட

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மகளிர் கல்லூரி) - கட்டுரை, கடிதம் எழுதுதல் போட்டி.

- லிண்டா அன்ரன் செல்லக்குமார் (திருக்குடும்பக் கன்னியர் மடம் மகா வித்தியாலயம்) - குறுநாடக எழுதத்துருவாக்கப் போட்டி.
- ஆன் மடோனா ஆன்சியா முத்துக்குமார்(ஜோன் பொஸ்கோ) - எழுததாக்கம், சிறு கட்டுரை எழுதுதல் போட்டி.

வெள்ளிப் பதக்கம்

- அம்பிகா ஸ்ரீதரன்(சுண்டுக்குளி) - சிறுகதை எழுத்துருவாக்கப் போட்டி
- மு.கனவேல் அழகன், சி.க. கௌசிகன், க.கா.காண்டிபன் (மூவரும் சென். ஜோன்ஸ் கல்லூரி) - பட்டி மன்றப் போட்டி
- கே.திருவரங்கன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி) - பாவோதல் போட்டி. (ம)


## Learn C++ in 3 Weeks

வெளியீட்டுத்தினம்
19.09.2001 புதன்கிழமை
காலை 9.00 மணி
C++ கொம்பியூட்டர் கற்கை நெறியைத் துரிதமாகக் கற்றுக்கொள்ள அரிய நூல்!!
ஆக்கியோன்:-
கொம்பியூட்டர் விஞ்ஞானி
S.K.குணசீலன் U.S.A.
பக்கங்கள்: 840; விலை ரூ.690/=
முகவுரை:-
பேராசிரியர் S.ரத்தினஜீவன்
H கூல்
தலைவர்,
கொம்பியூட்டர் பகுதி,
பேராதனைப் பல்கலைக்கழகம்.
வெளியீட்டாளர்:-
அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் முன்பாக)
424C, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (92346)



இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட
இந்தியாவின் பிரபல கர்நாடக சங்கீத
விற்பன்னர்களின் இசைத்தட்டுக்கள் (AUDIO CD)
வெளிவந்துள்ளன.

1. உன்னிகிருஷ்ணன் (VOCAL:- VOL.I, VOL.II)
2. சுதா ரகுநாதன் (VOCAL:- VOL.I, II)
3. பம்பாய் சகோதரிகள் (VOCAL:- VOL.I, II)
4. பம்பாய் ஜெயஸ்ரீ
5. பிரியா சகோதரிகள் (VOCAL:- VOL.I, II)
6. T.N.ஷக்ச கோபாலன் 7. S.ஜானகி
8. D.K.பட்டம்மாள் 9. ஷேம்ஙப வைத்தியநாத பாகவதர்
10. சௌமியா (பாரதியார் பாடல்கள், சின்னஞ்சிறு கிளியே)

வாத்தியங்கள்

1. குன்னக்குடி வைத்தியநாதன் (வயலின் கர்நாடக கச்சேரிகள்) (வயலின் திரைப்படப் பாடல்கள்)
2. Dr.N.ரமணி (புல்லாங்குழல் VOL.I,II கர்நாடகக் கச்சேரிகள்)
3. தாளவாத்திய கச்சேரிகள் 4. A.R.ரகுமானின் இசை
5. கதிர் கோபால்நாத் (சக்ஷபோன்)

Note:- வர்ணப் படங்களுடன்
ஒளிப்பதிவு செய்யப்பட்ட கசற்றுக்கள் விற்பனைக்கு உண்டு.
இன்னிசை உலாவரும் இன்ப இசைச் சோலை
விஜேய் ரெக்கோடிங் சென்ரர்
539.பருத்தித்துறை வீதி, நல்லூர். (92367) கிளை:- பிரதான வீதி, மானிப்பாய்



## டிவைன் சென்ரர்



காத்திருந்த வரம் கிடைக்கது

DIVINE CENTRE

ஆண்டவர் என்னைத் தொட்டார்

### இறை தியான இல்லம்

அன்பான இறை மக்களே!
இந்தியாவிலுள்ள முரிங்கூர் என்னுமிடத்தில் வாராந்தம் கூடும் ஆயிரக்கணக்கான இறைபக்தர்களின் குறைகள் போக்கி, ஆன்மீக விடுதலை அளித்துவரும் 'டிவைன் சென்ரர்' எனப்படும் இறை தியான இல்லத்தில் அரும்பணியாற்றும் வழிகாட்டிகள் எமக்கும் இறை அனுபவத்தை அள்ளித்தர எமது மறை மாவட்டத்திற்கு வருகை தருகிறார்கள்.

எதிர்வரும்
ஒக்ரோபர் முதல் வாரத்தில்.

ஆண்டவரின் வார்த்தை குணமளித்தது

எமது ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களின் அழைப்பை ஏற்று முதல்முறையாக எமது மண்ணில் தமது மாபெரும் இறை ஆற்றலை பகிர வரும் இவர்களை நன்றியோடு வரவேற்போம்.

### இறை அனுபவம் பெற ஆயத்தமாவோம்!

ஆண்டவர் எம்மையும் தொட வருகிறார்! அவரின் அன்பை அனுபவிப்போம்!
நாமும் சாட்சியம் பகர்வோம்! கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ்வோம்!
யாழ்ப்பாணம், மானிப்பாய், பருத்தித்துறை, தீவகம் ஆகிய இடங்களில்!
விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.

நான் கடவுளின் பெருமையைக் கண்டேன்

(92359) - யாழ்.மறைமாவட்ட கத்தோலிக்க குருக்கள் ஒன்றியம் -





## ARE YOU READY!

to meet the challenges of the New Millennium
For Students, School leavers, Academics and Professionals

Hurry! new batches start from 18th Sep. 2001

**Diploma in Computer Handling**
Duration 2 Months
MS Word, MS Excel, Power point
Window Operating System & Multimedia
E-mail & Internet

**Diploma in Computer Management**
Duration 3 Months + 1 Month Training/ Project
MS Word, MS Excel, Power point
Window Operating System & Multimedia
E-mail & Internet
Office Management Using Computer

**Diploma in Database Management System**

**Diploma in Desktop Publishing**

**Language Courses**
C++
Java
Visual Basic

STP It is easy solution for your future
54A, Palaly Road, Kantharmadam, Jaffna.
Tel.:021-2674, E.Mail:stpedu@hotmail.com.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.09.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.